147

ஜகன் மோகினி

அக்டோபர் 1955

JAGAN MOHINI

ESTD. 1923

அணா நான்கு

147
4.55

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - OCT 1955
MADRAS

க்ஷேமலாபங்கள்

வாசகமஹாஶயர்களுக்கு வந்தனம், உபயகுசலம். மோகினியில் வருவதில் வாசகர்களுக்குப் பிடித்த விஷயத்தை வரிசையாகக் குறிப்பிட்டு எழுதும்படி நாம் செய்திருந்த விண்ணப்பத்திற்குப் பலர் பலபலவிதமாகக் கடிதம் எழுதியதோடு தமது யோசனைகளை யும் சிலர் எழுதியிருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் என் மனமார்ந்த வந்தனம. நேயர்களின் விருப்பமும் யோசனையும் மிக மிக ரஸமானவை. அவைகளை அன்புடன் வரவேற்கிறேன். எல்லாக் கடிதங்களையும் குறிப்பிட இயலாததால், முக்கியமாகச் சிலவற்றின் ஸாரத்தைத் தெரிவிக்கிறேன்.

"........பத்திரிகைகளின் எண்ணிக்கையும், போட்டிகளும் அதிகமாகிவிட்டிருக்கும் இக்காலத்தில் முன்புபோல் ஆசிரியை யின் கதையைத்தான் அதிக ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

T. கோவிந்தசாமி, தஞ்சாவூர்.

சிறு கதைகளுக்கு உங்கள் பத்ரிகையில் பஞ்சமாக இருப்பதை நான் குறிப்பிடுகிறேன். குறைந்தது ஒவ்வொரு இதழிலும் 5, 6 சிறுகதைகளாவது வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

V. லக்ஷ்மியம்மாள், சேலம்.

மொழி பெயர்ப்பு மோகம் அதிகமாயுள்ள இக்காலத்தில் அந்தப் பகுதியே நீங்கள் விலக்கிவிட்டிருப்பது ஏன்?...

R. ஸேது அம்மாள், தூத்துக்குடி.

ஸ்ரீமதி பத்மினி ஸ்ரீநிவாசனுடைய தொடர் கதை வரப்போவ தாக எழுதியிருப்பதை நான் விரும்புகிறேன். பாலர் மோகினிக் கதைவருமா! வராதா...பாலர்களுக்குப் படம்என் போடக்கூடாது?

கண்ணன் C/o K.ரங்கநாத முதலியார், கோயமுத்தூர்.

எங்களுக்குப் புரியாத ஏதேதோ ஆத்ம விஷயம்...வைதீக விஷயம் இவைகளை நாங்கள் பக்கம் தள்ளிவிடுகிறோம். சிறுகதை கள் தான் தேவை.

C. ஸ்ரீராமன், சிதம்பரம்.

32 வருஷங்களாக மோகினி விடாமல் தைலதாரையைப்போல நடக்கிற தனிப்பெருமை அதற்கிருக்கிறது. எனினும் ஸினிமா விஷயமே போடாதது குறையாக இருக்கிறது. ஸினிமா விமர் சனமோ குறிப்போ போடுவது நலம்.

மு. அப்துல்காதர், ஆரணி.

வாழ்க்கையில் ஒரு குறிப்பு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. பகவத் விஷயத்தை நான மிகவும் ரஸிக்கிறேன். ஆன்ம தத்துவம் விளங்கவே இல்லை.

L. துரைராஜன், கடலூர்.

காளிதாஸரின் கனவும், மேனாட்டுத் தத்துவமும் எனக்குப் பெருவிருந்து. என் மனைவிக்கு வாழ்க்கையில் ஒரு குறிப்பும், வாழ்க்கை தீபமும் அபார விருந்து. ஏன் ரஸமான ஜீவிய சரித திரம போடவில்லை? முன்புபோல் வருஷக்கணக்கில் வளர்த்தாது போட்டால் வரவேற்கலாம்.

Y. க்ருஷ்ணமூர்த்தி, கோபிச்செட்டிப்பாளையம்.

நான் ஆசிரியர் நாவல் ஒன்றுக்காகத்தான் மோகினி வாங்கு கிறேன். 10 பக்கமும், எட்டு பக்கமும் வருவது பெரிய ஏமாற்ற மடைகிறேன். குறைந்தது 20 பக்கங்களாவது எதிர்பார்க்கிறேன்.

தா. சிங்காரவேலு செட்டியார், நாகர்கோயில்.

[தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்.]

பகவத்விஷய ரஸாநுபவம்

ஸ்ரீ காஞ்சீ மஹா வித்வான் ஸ்ரீ. உ. வே. ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

மூன்றும் பதிகம்

கீழே இரண்டு பதிகங்கள் விவரிக்கப்பட்டன. எம்பெருமானுடைய பரத்துவத்தை ஆழ்வார்தாம் அநுபவிப்பதாக அமைந்தது முதற்பதிகம். அப்படிப்பட்ட பரத்துவமுடைய பெருமானைப் பற்றுங்களென்று ஸம்ஸாரிகளுக்கு உபதேசம் செய்தருள்வதாக அமைந்தது இரண்டாம் பதிகம். இப்படி ஒரு பதிகம் தம்முடைய அநுபவரூபமாகவும், மற்றொரு பதிகம் பரோபதேசரூபமாகவும் நிகழ்ந்தாலும், தாம் அநுபவிக்கும்போது பரோபதேசமுமுண்டு, பரோபதேசம் செய்தருளும்போது தம்முடைய அநுபவமுமுண்டு என்பர் நமது பேராசிரியர்கள். ஆழ்வார் தம்முடைய பிரபந்தங்களுள் மூன்றுவதான பெரிய திருவந்தாதியில் "ஆரானுமாதானுஞ் செய்க, அகலிடத்தை ஆராய்ந்து அது திருத்தலாவதே" என்றருளிச் செய்திருக்கும் பாசுரத்தை யுற்று நோக்குமளவில், உபதேசங்களைச் செய்து ஸம்ஸாரிகளைத் திருத்துகைக்காகவே ஆழ்வார்தாம் அவதரித்ததாகத் தெரியவரும். ஆகவே இவர்க்கு உபதேசங்கள் செய்தருள்வதே முக்கியமாகும். ஆனாலும் பத்துப் பதிகங்கள் கொண்ட ஒரு பத்தில் ஒரு பதிகந்தான உபதேச பரமாகக் காணப்படும். மற்றுள்ள பதிகங்கள் தம்முடைய அநுபவரூபமாகக் காணப்பட்டாலும் அவற்றிலும் உபதேசம் உறைந்திடப்பதாகவே கொள்ள வேணுமென்பது ஆசாரியர்களின் திருவுள்ளம்.

கீழ்ப்பதிகத்தில் உபதேசிக்கப்பெற்ற ஸம்ஸாரிகள் ஆழ்வாரை நோக்கி "ஸ்வாமிந்! பற்றுங்கள் பற்றுங்களென்று பலகாலுமருளிச் செய்யாநின்றீர்; இருகை முடவனை நோக்கி ஆனைமேறு என்றால் அவனால் ஏறப்போமோ? அப்படியே ஸர்வேச்வரனும் நாகணைமிசை நம்பரர் செல்வர் பெரியர் என்னும்படி மிகப் பெரியனுமாயிருக்கின்ற அப்பரமனை நீசரான ஸம்ஸாரிகளாலே பற்றப் போமோ?" என்று கூற, ஆனைதானே இருகை முடவனுக்கும் ஏறலாம்படி படிந்து கொடுக்குங்கால் ஏறத்தட்டில்லையன்றோ. எளிதாக ஏறலாமே; அப்படியே ஸம்ஸாரிகளுக்கும் பஜிக்கலாம்படி எம்பெருமான் தன்னைத் தாழவிட்டு எளியனுகுமவனுகையாலே பஜிக்கத் தட்டில்லையேயென்று அவனுடைய எளிமைக்குணத்தை எடுத்துரைக்கிறார் இப்பதிகத்தில்.

உலகத்துப் பொருள்களை இரண்டு வகுப்பாகப் பிரிக்கலாம்—பெறுதற்கு அரியனவென்றும் பெறுதற்கு எளியனவென்றும். மணிமாணிக்கங்கள் நவநிதிகள் முதலான பொருள்கள் பெறுதற்கு

அரியன; மண்மணல் பருக்கை முதலான பொருள்கள் பெறுதற்கு எளியன. இங்ஙனே சில பொருள்கள் அரியன வாயும் சில பொருள்கள் எளியனவாயுமிருப்பதற்கு யாது காரணமென்று ஆராயப்புகின், அக்காரணம் தெரிந்து கொள்ள முடியாததன்று. அருமைக்குக் காரணம் பெருமை; எளிமைக்குக் காரணம் சிறுமை. பெருமை தங்கிய பொருள்கள் அருமைப்படுகின்றன; பெருமையற்ற சிறுபொருள்கள் எளியன வாகின்றன என்றதாயிற்று. மேருமலை, கைலாஸமலை, பாற்கடல், தங்கம், வெள்ளி முதலானவை அருமையாயிருப்பதற்குக் காரணம் அவற்றிலுள்ள பெருமையேயாகும். காஷ்டலோஷ்டங்கள் எளியனவாயிருப்பதற்குக் காரணம் அவற்றிலுள்ள சிறுமையேயாகும். பெருமையோடுங்கூடி எளிமையோடுங் கூடியிருத்தலைக் காண வேணுமானால் அது பகவானிடத்தேதான் காணலாகும். எம்பெருமானிடத்தில் பரத்துவம் மிக்கிருப்பதுபோலவே ஸௌலப்யமும் மிக்கிருப்பதாகும். பரத்துவத்தைக்கண்டு பின்வாங்க வேண்டாமைக்கு ஸௌலப்யம் [எளிமைக்குணம்] காட்டப்படும். ஸௌலப்யத்தைக்கண்டு உபேக்ஷிக்க வேண்டாமைக்குப் பரத்துவம் காட்டப்படும். முதற்பதிகத்தில் அவனுடைய பரத்துவம் பேசப்பட்டது; இப்பதிகத்தில் ஸௌலப்யம் பேசப்படுகிறது.

முதற்பாட்டு

எம்பெருமானுடைய பரத்துவத்தை எவ்வளவும் பேசலாம்; எளிமையைப் பேசுவதென்பது மிகவுமரிது. 'அப்படிப்பட்ட பெரியவன் இப்படித் தாழுகின்றானே!' என்று நினைக்கும்போது உள்ள முருகிக் கண்ணீர் சொரிய வேண்டியிருப்பதால் எளிமையைத் தெளிந்திருந்து பேச இயலாது. இப்பதிகத்தின் முதற்பாட்டில் ஆழ்வார் ஆறு மாதம் மோஹித்துக் கிடந்ததாக ஸம்பிரதாயம் வல்ல பெரியார் கூறுவர்.

> பத்துடை யடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய
> வித்தகன், மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள்
> மத்துறு கடைவெண்ணெய் களவினி லுரவிடை யாப்புண்டு
> எத்திற முரலினே டிணைந்திருந் தேங்கிய வெளிவே.

எம்பெருமான் எளியன் என்றால் யார்க்கு எளியன்? என்று கேள்வி பிறக்கும். எல்லார்க்குமெளியன் என்னப் போகாது. மணிமாணிக்கங்கள் அரியனவாயிருந்தாலும் சிலர்க்கு எளியனவாகின்றன வென்று காண்கிறோம். யாருக்கு எளியனவாகின்றனவென்னில், மிகுந்த செல்வம் படைத்தவர்களுக்கு எளியனவாகின்றன. அது போல எம்பெருமான் எளியவனென்றால் பக்திச்செல்வமுடையவர்களுக்கே எளியனாகக்கூடும். பக்தியையுடைய அடியவர்களுக்கு மிகவும் ஸுலபன்.

பக்தியென்னும் வடசொல் பத்தியென விகாரப்பட்டு அதுவே பத்து என்றும் விகாரப்பட்டதென்றுகொள்க. திருமழிசை யாழ்வார் திருச்சந்தவிருத்தத்தில் "எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால் மனந்தனைக்கட்டி" என்றருளிச் செய்தார்; எட்டோடு இரண்டு சேர்ந்தால் பத்து ஆகிறது; அங்குப் பத்து என்கிற

18395

என் விவக்ஷிதமன்று; பக்தியே விவக்ஷிதம். ஆகவே பக்திக்கு வாசகமான பத்து என்னுஞ் சொல் ஆழ்வார்கள் கோஷ்டியில் பிரசித்தமென்றறிக.

எம்பெருமான் எளியனும் போதைக்கு எவ்வளவு பக்தி இருக்கவேணுமென்னில், அதைப்பற்றி ஆழ்வார் ஒன்றும் தெரிவிக்கவில்லை. பக்திக்குப் பலபல கணுக்கள் உண்டாதலால் ஆரம்பதசையாகிய பக்தியைக் கொள்வதா? சிறிது முதிர்ந்த பக்தியைக் கொள்வதா? முற்ற முதிர்ந்த பக்தியைக் கொள்வதா? என்னில்; ஆரம்பதசையிலுள்ள பக்தியைக் கொள்வதே சிறக்குமென்பர்.

ஆங்காங்கு இதிஹாஸ புராணங்களில் எம்பெருமானுடைய திருவாக்குக்களைக் காணுமிடத்து பக்தியின் லவலேசமிருந்தாலும் தான் கைக்கொள்வதாகக் கூறியிருப்பது தெரியவருதலாலும், எம்பெருமானது திருக்குணத்தைப் பாராட்டிச் சொல்லுகிற பிரகரணமாதலாலும் இப்படித்தான் பொருள் கொள்ளவேண்டும். முற்ற முதிர்ந்த பக்தியையுடையார்க்கு எளியன் என்று சொல்லுவது ஆழ்வார் திருவுள்ளத்திற்கு இசைந்ததாகாது.

எம்பெருமான் என்று ஒருவர் சொன்னவளவிலேயே 'அவனார்? அவனெங்குளன்? அவனை நீ கண்டாயோ?' என்று தொடங்கி நிந்திக்கப் புகுவதுண்டே, அப்படி நிந்திக்கப்புகாமல் ஒன்றும் பேசாமல் வாளாவிருக்கிற நிலை அத்வேஷ நிலையெனப்படும்; அதுதான் பக்திக்கு முதற்படியாடும். அஃது உடையவர்களுக்கும் எளியவனென்பதே "பத்துடையடியவர்க்கெளியவன்" என்பதற்குப் பொருளாம்.

'பத்து உடை' என்றது பக்தியை உடைமையாகக் கொண்டவர்களென்றபடி. பாகவதர்கட்குச் சிறந்த செல்வம் பக்தியேயாகும். இலங்கைச் செல்வமனைத்தையும் விட்டுப் புகலற்று வானத்திலே வந்துநின்ற விபீஷணாழ்வானைப் பற்றி வான்மீகி முனிவர் கூறும்போது "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" என்றார்; அப்போது அந்த விபீஷணாழ்வானை ஸ்ரீமானென்று சொல்லும்படியாக அவனிடத்து என்ன செல்வமிருந்தது? ஸ்ரீராம பக்தியாகிற செல்வமேயன்றோவிருந்தது. இராமபிரான் பின்னே மண்வெட்டியும் புற்கூடையுமாகப் புறப்பட்ட இளையபெருமாளை நோக்கி "லக்ஷ்மணோ! லக்ஷ்மி ஸம்பந்ந:" என்றார் அந்த வான்மீகி முனிவர்தாமே. அப்போது லக்ஷ்மணனுக்கிருந்த செல்வம் பக்திச் செல்வமேயன்றோ. முதலையின் வாயிலே யகப்பட்டுத் துடியாநின்ற கஜேந்திராழ்வான் "ஸ து நாகவர: ஸ்ரீமான்" எனப்பட்டான். அப்போது அந்த யானையரசனுக்கிருந்த செல்வம் பக்திச்செல்வத்திற்காட்டிலும் வேறுபட்டதன்றே.

ஆகவிப்படி பக்தியையே செல்வமாகக் கொண்டவர்களுக்குப் பகவான் எளியவனாயிருக்கையாவது கையாளாயிருக்கை. அதாவது ஏவின பணிவிடைகளெல்லாஞ் செய்யக் கடமைப்பட்டிருக்கை. விச்வாமித்ர முனிவன் பின்னே சென்ற தாசரதிகள் "இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவகிம்"

என்றார்கள்; முனிவரே! இதோ நாங்களிருவரும் பணிவிடை
செய்யக் காத்திருக்கிறோம்; எதுவேணுமானாலும் கூசாதே நியமித்
தருளவேணும் என்பது மேலெடுத்த ச்லோகத்தின் பொருள்.
இவ்வண்ணமாக ஏவிற்றெல்லாம் செய்யக் கடமைப்பட்டிருப்ப
னென்கை. கீதையில் அர்ஜுனனை நோக்கி "பக்த்யாது
அநந்யயா சக்ய: அஹமேவம் விதோர்ஜுந!" என்று கண்ண
பிரானருளிச் செய்ததும் இங்கு உணரத்தக்கது. அர்ஜுனா!
நான் பக்திக்குக் கட்டுப்படுவேன் காண் என்றான்; அதுகேட்ட
அர்ஜுனன் 'அது எங்ஙனம்?' என்று வினவ, அதற்கு விடை
"அர்ஜுந! அஹம் ஏவம்வித:" என்று. உலகில் ஒருவன் கறுத்
திருக்கவும் ஒருவன் சிவந்திருக்கவுங் கண்டாயே; அவை எப்படி
அவரவர்களுடைய இயல்போ, அப்படியே எனக்கும் இது இயல்
பென்று கொள்ளாய் என்றான் கண்ணபிரான்.

எளியவனாயிருக்குந் தன்மை எல்லாரிடத்துங் காட்டப்
பட்டால் அனர்த்தமாகுமே. உகந்தவர்கட்கு மாத்திரம் எளிய
னாய் உகவாதார்க்கு அருமைப்பட்டவனாயிருந்தால்தானே அன்பர்
தேறியிருக்கமுடியும்; அதற்காகவருளிச் செய்கிறார் "பிறர்களுக்
கரிய வித்தகன்" என்று. பத்துடை யடியவராகாதவர்கள்
பிறரெனப்படுகிறார்கள். பகவானையே உபேயமும் உபாயமுமாகக்
கொள்ளாதவர்கள் பிறர்; பகவானை உபேயம் மட்டுமாகக்கொண்டு
பிறிதொன்றை உபாயமாகக் கொள்பவர்களும் பிறர்களாவர்.
அன்னவர்கட்கு அருமைப்பட்டிருப்ப னெம்பெருமான். பாண்ட
வர்கட்குத் தூது போதல், தேர்ப்பாகனாயிருத்தல் முதலிய காரி
யங்களைச் செய்து, எளியவனாயிருந்தவன்தானே எதிர்த்தலைக்கு
அணுகவுமொண்ணாதவனாயிருந்தானன்றோ! யசோதைப் பிராட்டி
முதலானார்க்கு விதேயனாயிருந்த நிலை தன்னிலேயே பூதனை,
சகடம், மருதம், தேனுகன், பிலம்பன், காளியன் முதலான
வற்றுக்கு அணுகவுமொண்ணா திருந்தானன்றோ.

ஆக முதலடியால் எம்பெருமானுடைய எளிமைக் குணம்
நிரூபிக்கப்பட்டது. அக்குணம் எங்கே சோபிக்குமென்றால் மேன்
மையுள்ளவிடத்தில்தான் சோபிக்குமென்று முன்னமே சொன்
னோம். ஆகவே அடுத்தபடியாக மேன்மையை நிரூபிக்கவேண்டி
யதாயிற்று; "மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள்" என்பத
னால் சிறந்ததொரு மேன்மை நிரூபிக்கப்படுகிறது. தாமரை மல
ரிலே பிறந்து அதனையே இருப்பிடமாக வுடையளாயிருந்த
பிராட்டி அங்கே அடிக்கொதித்து அதனைவிட்டுத் தனது திரு
மார்பை விரும்பி விடாதே யிருக்கப்பெற்ற பெருமையானது
எம்பெருமானுக்குள்ள பெருமைகளில் தலைசிறந்ததாகும். இராவ
ணன் மாரீசனிடம் சென்று இராமபிரானுக்குத் தீங்கிழைக்கத்
துணை வேண்டினபோது அவனுக்கு மாரீசன் சொன்ன சொல்
காண்மின்—"அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகா
த்மஜா" என்பது. வேள்வி காக்கும் பொருட்டு விச்வாமித்திர
முனிவனோடு கூடப் பிரமசாரியாய் வந்திருந்த போதே ஸ்ரீராம
னுடைய திறல் அற்புதமாயிருந்தது; பின்னை ஸாக்ஷாத் திருமா

மகளான ஜனகராஜன் திருமகளைக் கைப்பற்றின பின்பு அவளோடுண்டான சேர்த்தியினால் அளவிடமுடியாதபடியன்றோ அவனுடைய திறல் இருப்பது என்றான். இது அரக்கனான மாரீசனுடைய வாக்கிலிருந்து வெளிவந்த அர்த்தமாயினும் வேதாந்த விழுப்பொருளே யாகும். திருமாமகள் கொழுநனாயிருப்பதே திருமாலின் பெருமைகளில் தலையானதென்க. மலர்மகள் விரும்புமடிகளென்பதை இங்குக் கூறினது முன்னடியிற் சொன்ன எளிமைக் குணம் திருமகளோடுண்டான சேர்த்தியினாலே விளைந்தது என்பதைக் காட்டுதற்குமாம். "அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாத நிக்ரஹாம்" என்று வேதாந்த தேசிகர் கூறியபடி பிராட்டியானவள் அநுக்ரஹமே வடிவெடுத்தவளாதலால் அவளுடைய சேர்த்தியானது எம்பெருமானுக்கு ஸ்வாதந்திரியத்தைப் போக்கி ஸௌலப்யத்தை விளைவிக்கின்றதென்பது பரமார்த்தம்.

எம்பெருமான் எளியனென்று வெறுமனே சொல்லிவிட்டால் போதுமோ? அதை நடத்தையினால் எடுத்துக்காட்டி மனத்திற் பதிய வைக்க வேணுமே. அதற்காக ஒரு சரித்திரமெடுத்துக்கூறி யநுபவிக்கின்றார், மத்துறு கடைவெண்ணெயென்று தொடங்கி. கண்ணபிரானுக்கு வெண்ணெயில் மிக விருப்பம். அதைக் களவாடி யமுது செய்கையில் இன்னமும் அதிகமான விருப்பம். பரமபதத்திலிருந்து இதற்காகவே க்ருஷ்ணனாய் அவதரித்தானென்றுங் கூறுவர்.

நம்மாழ்வார் தாமே திருவிருத்தத்தில் *சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டி அந்தூபந் தராநிற்கவேயங்கு, ஓர் மாயையினாலீட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்து * என்றருளிச்செய்திருப்பது காண்க. வெண்ணெய் களவுசெய்து உண்பதற்காகவே நித்யஸூரிகளை வஞ்சித்துத் திருநாட்டில்நின்றும் திருவாய்ப்பாடிக்கு வந்ததாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெண்ணெய்மட்டுமல்ல; நெய்பால்தயிர் முதலான கவ்யங்களெல்லாவற்றிலுமே கண்ணனுக்கு அளவு கடந்த ஆசையுண்டு.

"வைத்தநெய்யுங் காய்ந்தபாலும் வடிதயிரும் நறுவெண்ணெயும், இத்தனையும் பெற்றறியேன் எம்பிரான் நீ பிறந்த பின்னை" என்று யசோதைப்பிராட்டி அடிக்கடி கூறுவள். மனைதோறும் சென்று எனக்கு வெண்ணெய் வேணும், நெய் வேணும், பால் வேணுமென்று எவ்வளவு கேட்டாலும் அவரவர்கள் அன்போடும் ஆர்வத்தோடும் அள்ளியள்ளிக் கொடுக்கப் பின்வாங்க மாட்டார்கள்; அப்படியிருந்தும் கண்ணன் அவற்றைக் களவு முறையில் சம்பாதித்துண்ண விரும்பியது எதனாலென்னில்;

தாம்பினால் கட்டுண்டு கிடந்து ஒரு பெருங்குணத்தை வெளியிட வேணுமென்பது கண்ணனுடைய அவா; வேண்டியவற்றை இரந்து பெற்று உண்டானாகில் கட்டியடிக்க அவகாசமிராது; ஆப்புண்டு அடியுண்டு அழுதுகிடந்தானென்கிற எளிமைக்குணம் விளங்காதன்றோ. முக்கியமாக அவதாரம் செய்வது திருக்குணங்களை வெளியிடுவதற்காகவேயன்றோ; "குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம்" என்றன்றோ (ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்) பட்டர் அருளிச்செய்தது.

(தொடரும்.)

மேனாட்டுத் தத்துவம்

இரண்டாம் பாகம்

ஸிம்போஸியம்; பேட்ரஸ்

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அவனுக்கொரு தலைதான்; இரண்டு முகங்கள்; முகங்கள் ஒரு முகமாய் நோக்கா; ஒன்று கிழக்கே பார்த்தால்; மற்றொன்று மேற்கே நோக்கும். அதற்கு நான்கு காதுகள், இரண்டு உற்பத்திக் குறிகள். விருப்பமிருந்தால், மனிதன்போல நடமாடும்; சில வேளைகளில் விலங்குகள்போல் விரைவாய் ஓடினாலும் ஓடும். மூன்று வடிவங்கள் இருப்பதற்குக் காரணம் இல்லாமலில்லை; சூரியன், சந்திரன், பூமி—இம்மூன்றும் இருக்கின்றன அல்லவா? சூரியனிடத்தில் மனிதன் தோன்றுகிறான், பூமியிலே, பெண் பிறக்கிறாள், சந்திரனிடத்திலிருந்து அர்த்தநாரி வடிவம் வருகின்றது.

இந்த அபூர்வ மனித வடிவம் தெய்வங்களை எதிர்த்துப் போர் புரிந்தது. தெய்வங்கள் ஒரு சபையைக் கூட்டின; இந்த வடிவத்தை அரக்கர்களைக் கொன்றதுபோல அழித்துவிட்டால் யாகங்கள் நின்றுவிடும். அப்படி அழித்தால் தெய்வங்களுக்குத் தான் மிகுந்த சேதமேற்படும்; ஆனால் இந்த வடிவத்தின் அகம்பாவத்தையும் ஆற்றலையும் குலைத்துவிடவேண்டும்என்று தெய்வ நாயகனான இஸ்சியூஸ் எண்ணி இந்த வடிவத்தை இரண்டாக்கினார்; அன்று தொட்டு ஒருபாகம் மற்றொரு பாகத்தைத் தேடித் திரிய ஆரம்பித்தது. உற்பத்திக்குறிகள் அமைத்தான்; ஆண் பெண் கூடுவதற்குச் சுலபமாய்ப் போய்விட்டது. ஒருபாகம் இன்னொரு பாகத்தை ஆர்வத்துடன் தேடித் திரிகின்றதே இது தான் அன்பு என்று அரிஸ்டாபனிஸ் முடித்தார்.

பிறகு அகாதன் (Agathon) கூறத்தொடங்கினார். பீட்ரஸ் அன்பைப்பற்றி மொழிந்த பல அம்சங்களை நான்ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் அன்புத் தெய்வத்தை ஒரு கிழத் தெய்வமாகக் கருதவில்லை. அது இளமை மாறாத தெய்வம்; வாடாத மலரிடத்திலும், தேயாத அழகு தங்கியிருக்கிற இடத்திலும் அது உறைகின்றது. அந்த அன்பில் ஒரு மிதம் மிளிர்இன்றது; ஒரு நியாயம் வீற்றிருக்கிறது; அதில் ஒரு தைரியம் தாண்டவமாடுகின்றது. அதில் ஓர் அறிவு பழுத்து நிற்கின்றது; அதன் விரல் படுமானால் தூங்குகின்ற இசை எழாமற் போகாது. எல்லாம் அழகு வடிவமாயுள்ள அன்பாம் யாழில் பிறக்கின்றன. அதன் அருட்பார்வையில் கவிகள் தோன்றித் தேம்பிழி மகரயாழை யொத்த கவி விருந்தை நம் செவிகளுக்கு நல்குகின்றனர், கேட்கின்ற நாமும் கவிகள் தாம்: கவி உணர்ச்சியில்லாதவர்கள் கவிகள் பாடமுடியாது. கவி உணர்ச்சி இல்லாதவர்கள் கவிகளை நுகாமுடியாது. இந்த

அன்பு அரசு செலுத்தாத உள்ளமில்லை என்று தம் கருத்தை வெளியிட்டார் அகாதன்.

மாண்டினியாவைச் (Mantineia) சார்ந்த டையோடிமா (Diotima) எனக்கு அன்பைப்பற்றிப் புரிந்த உபதேசத்தை உங்களுக்குக் கூறுகின்றேன் என்று சாக்ரடீஸ் சாற்றலுற்றார். 'அந்தத் தேவி கற்காத கலைகளில்லை. 'அன்பு அழகில்தான் திளைக்கும்: அழகுதான் நலத்தை நல்கும்; அந்நலத்தில்தான் இன்பம் பிறக்கும்' என்றாள்.

அன்பின் தோற்றம் அழகை நாடுவதற்கு மட்டுமன்று... அழகான மக்களைப் படைப்பதற்கும் அது நம்மைத் தூண்டுகின்றது. இப்படிப் படைப்பதால், மனிதனுக்கு உடல் மூலமாக ஓர் அமரத்வம் அலர்கின்றது. [தகப்பன் தான் பெற்ற பிள்ளை மூலம் மீண்டுந் தோன்றுகின்றான் என்று பழைய மறைகளும் சாற்றவில்லையா?]

மேலும் நம்முடைய ஞானமெல்லாம் முன் கண்ட உண்மையின் நினைவே; இந்த நினைவு அழகிறதில்லை.

ஆனால் சரீர மூலம் அடைகின்ற அமரத்வத்தைக் காட்டிலும் வேறுவிதமான அமரத்வத்தைக் காணலாம். ஆத்மாவில்—அக உயிரில்—ஒரு பெரியதோர் அமர நிலையை உணர்கின்றோம். சாதாரண மனிதர்கள் உடல் மூலமாகப் படைக்கின்ற—மனிதர்கள் மணம் புரிந்து மக்களைப் பெறுகின்றனர். இம்மக்கள் அவர்களுடைய ஞாபகச் சின்னங்களை அழியாவண்ணம் காப்பாற்றுகின்றனர். தம் மக்கட்பிறப்பிலே தாம் வாழ்கின்றனர் என்று முன்பு கூறினோம்.

வேறு சில சான்றோர்கள் ஆத்ம குணங்களில் ஈடுபட்டுப் புதியதொரு சிருஷ்டிகளைச் செய்கின்றனர். ஆத்மா முதிர்ச்சி அடைவதற்குத் தக்க பாதையும் வகுத்துத் தந்தாள் அந்தத் தேவி.

இளரொளியிளமையில் வனப்புள்ள பொருள்களில் மனிதன் திளைக்க வேண்டும். இவைகளைப் பார்ப்பதால், அழகான எண்ணங்கள் உள்ளத்தில் வளரும். உடலின் அழகைக் காட்டிலும், அகத்தில் அழகு சிறந்ததாகக் காட்சி அளிக்கும். அழகைப் பருகிப்பருகி, எங்கும் அழகு தாண்டவமாடக் காண்பான். அன்பிலே பிறந்த அழகு மூலம் புவனசுந்தரனை அடைய முடியும். அதைக் கண்ட கண்கள் மற்றொன்றைக் காணா என்ற உபதேசத்தை அருளினார் அந்த உத்தமி. அதை உங்கட்குச் சொன்னேன் என்றார் சாக்ரடீஸ். பேச்சு முடிந்ததும் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. ஆல்சிபியாடிஸ் களியாட்ட நண்பர்களோடு உள்ளே நுழைந்தார். அவர் சாக்ரடீஸுக்குப் புகழ்மாலை சூட்டினார்.

இப்படி இந்தச் சிம்போசியம் முடிவடைகின்றது; இதில் காணபபடும் தத்துவங்கள் நம் நாட்டுத் தத்துவங்களை நினைவூட்டுகின்றன. நம்முடைய ஆத்மா பகவானிடமிருந்து பிரிந்த கார

ணத்தால், அதை நண்ணப் பல நீண்ட யாத்திரைகள் செய்கின்றன. ஆணும் பெண்ணுஞ் சேர்ந்து ஓர் உருவம் முன்பு இருந்தது என்று அரிஸ்டாபினீஸ் குறித்தாரனரே. பிறகு இவ்விரண்டும் பிரிந்தன. பிரிந்த நாள் முதற்கொண்டு ஒன்று மற்றொன்றை நாடத் தொடங்கி விடுகின்றது என்ற கருத்தைப்பற்றி முன் சொல்லியிருக்கிறோம். ஆண்டவன் ஒருவன்தான் புருஷன்; மற்ற யாவும் அவனை நாடுகின்ற பெண்கள் என்ற தத்துவத்தையும் நம் சான்றோர்கள் கூறியிருக்கின்றனர். இந்த ஆத்மாக்களாம் பெண் தம் தம் நாதனைவிட்டு அகன்றிருக்கின்றன. ஆண்டவனை நெருங்க ஆத்மாக்கள் செய்கின்ற பிரயாணமே வேதாந்த விசாரமாகும்.

அன்பு மூலம் அழகு தோன்றும்; அழகு மூலம் ஆண்டவனை அடைய முடியும் என்ற கருத்தை மனத்தில் கொண்டே திருமகள் மூலம் பகவானை அடைய முடியும் என்று வைணவர்களில் சிலர் சாதாரண மனிதர்களுக்கு விளங்கச் சொன்னார் போலும் என்ற விஷயமும் நம் சிந்தைக்கு வராமற் போகாது.

அன்புக்கண்ணோடு பார்த்தால் உலகமனைத்தும் அழகு தாண்டவமாடும் மாபெரும் கோயிலாகக் காட்சி அளிக்கும். மேலும் ஆர் உயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியை அன்போடு பொருந்துவதற்கு வந்த நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்.

அன்போடியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

உருளு நேமியு மொண்கவ ரெஃகமு
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்குந்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
மருளு நீத்தபி னுவதுண் டாகுமோ?

என்று கம்பர், வசிஷ்டர் வாயிலாகக் கூறும் செய்யுள் சிந்திக்கத் தகுந்தது. (தொடரும்.)

சென்னை ரேடியோவில்

ஸ்ரீமதி வை. மு. கோ. அவர்களின் இசை நிகழ்ச்சி.

நாளது 12–10–55 பிற்பகல் 1-மணிக்கு "கோலு மண்டபம்" என்ற இசை நிகழ்ச்சியை வை. மு. கோ. நடத்துவார். குமாரி ஜி.பி. ச[illegible]லாவும், வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸனும் இந்நிகழ்ச்சியில் [illegible]ந்து கொண்டு பாடுவார்கள்.

சென்ற டிஸம்பரில் ஒலிபரப்பப்பட்ட இசைச் சித்திரம் **சந்திரகலாமாலை** விசேஷ அனுபந்தங்களுடன் தனிப் புத்தகமாக வெளியாகியுள்ளது, அணா 12. (பாசுரம், ஸாரம் உள்பட.)

சென்ற ஜூலையில் ஒலிபரப்பப்பட்ட **கல்யாண ஸம்ப்ரதாயம்** என்ற இசைச் சித்திரம் பல அதிகப்படியான பாடல்களுடன் தனிப் புத்தகமாக அச்சாகி வருகிறது. விரைவில் வெளிவரும்.

“அன்பும் அறியாமையும்”

ஹிந்தி மூல ஆசிரியர்:
பி. வெங்கடாசல சர்மா

மொழிபெயர்த்தது:
வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

அதிகாலை. காற்று ரம்யமாய் வீசிக்கொண்டு இருந்தது. ராமு, உஷா இருவரும் நித்ராதேவியின் அணைப்பில் தம்மை மறந்துத் தூங்கிக்கொண்டு இருந்தார்கள்.

கீச்...கீச் என்ற குருவிகளின் கூக்குரல் ராமு, உஷா இருவரின் செவிகளிலும் பாய்ந்து தூக்கத்தைக் கலைத்தது. சூரியனைக் கண்ட தாமரையின் இதழ்கள் எப்படி மலர்ந்து விரிகின்றனவோ அதுபோல் குருவிகளின் குரல்கேட்டதும்சிறுவர்களின் முகம் மலர்ந்து ஓடோடியும் வந்து வராண்டாவின் பக்கம் பார்த்தார்கள். ஜோடி-குருவிகள் தங்கள் சிறு மூக்கால் குப்பைகளை எடுத்து வந்து மும்முரமாய்க் கூண்டுகட்டி அதை இன்னும் பலப்படுத்திக் கொண்டு இருந்தன. அதைப் பார்த்து மகிழ்வதிலே தம்மையே மறந்தார்கள்.

ராமுவும் உஷாவும் தம்மை அறியாது குருவிகளின் இடத்தில் அன்பைச் செலுத்தினார்கள். அம்மா தங்களுக்குக் கொடுக்கும் ரொட்டியில் தெரியாது சில துண்டுகளைக் குருவிகளுக்கு எடுத்து வைத்துக் கொள்வர். அரிசியும் திருட்டுத்தனமாய் எடுத்து வந்து குருவிகளுக்குப் போடுவார்கள். காலை எழுந்தது முதல் இரவு படுக்கும்வரை வராண்டாவிலேயேகுருவிகளைப் பார்த்துக்கொண்டு காலத்தைக்கழிப்பார்கள். அவை கூண்டு கட்டுவதைப்பார்ப்பதே அவர்களுக்குத் தனி இன்பம். கீச்...கீச் என்று குருவிகள் கத்துவதைக் கேட்டாலே தம்மை மறந்து பூரிப்பார்கள். இதைப் பார்க்கும் ஆனந்தத்தில் பசி, தாகம்கூடத் தெரியாது.

சில தினங்களில் குருவி அந்தக் கூட்டில் முட்டை இட்டது. முட்டைகள் இருப்பதன் காரணமாய்க் குருவிகள் அடிக்கடி வராந்தாவிலேயே கீச்...கீச் என்று கத்தி வட்டமிடத் துடங்கின. இதை அறிந்த சிறுவர்களின் உள்ளத்தில் பலவிதமான எண்ணங்கள் எழத் தொடங்கின.

இரு உள்ளங்களும் பலமுறை கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கும்! பல கேள்விகள் எழும்; குருவி எத்தனை முட்டைகள் இட்டு இருக்கும். அது எவ்வளவு பெரிதாக இருக்கும்? அது என்ன வர்ணமாய் இருக்கும்? முட்டையில் இருந்து குஞ்சுகள் எப்படி வெளிவரும்? இவ்வளவு கூடு எப்படி அதற்குக் கட்டத் தெரியும். குஞ்சுகள் தவறிக் கீழே விழுந்து விட்டால் என்ன செய்வது? இப்படியாகப் பல கேள்விகள் இருவருக்கும் தோன்றும். ஆனால் பதில் கொடுப்பவர்கள் யார்?

அம்மாவைக் கேட்கலாம் என்றால் எப்பொழுதும் ஏதோ வேலை செய்துக் கொண்டே இருப்பாள்; கேட்டால் சீறிவிழுவாள். அப்பாவுக்கோ பத்திரிகை படிக்கக்கூட நேரம் இருக்காது. வேலைக்காரக் கிழவி வேலை செய்த நேரம்போக தூங்கிக் கொண்டே

இருப்பாள். பின்பு யாரைக்கேட்பது? இவர்களின் சந்தேகங்களைத் தீர்க்க ஆளே அகப்படவில்லை. அவர்களாகவே கேள்வி, பதில் இரண்டையும் சொல்லி சமாதானம் செய்துகொள்வார்கள்.

உஷாவுக்கோ ராமு தன்னைவிடப் பெரியவன், குருவிகளைப் பற்றி அவனுக்கு நன்றாய்த் தெரிந்து இருக்கும் என்று ராமுவை சதா குருவிகளைப்பற்றி ஏதோ கேள்விமேல் கேள்வி போட்டுத் திணரவடித்துகொண்டே இருப்பாள்.

உஷா:—ராமு! முட்டையில் இருந்து குருவிக் குஞ்சு வெளி வந்ததுமே பறக்குமா? நாம் பார்க்க முடியுமோ?

ராமு:—சீ அசடு! உடனே பறக்க அதற்கு ரக்கை இருக்குமா? ரக்கை முளைத்த பிறகுதான் பறக்கும்.

உஷா:—ஆமாம் ராமு! பாவம் குருவிகள் குஞ்சுக்கு என்ன ஆகாரம் கொடுக்கும்? அதுகூட பால் கொடுக்குமா?

ராமு:—இல்லை... இல்லை. அது தானியங்களை எங்காவது பொருக்கிக்கொண்டு வரும். அது தன் வாயிலேயே பாலாய்ச் செய்து அதன் வாயில் ஊட்டும்.

உஷா:—ஆமாம், அது எங்கு இருந்து தானியங்களைக்கொண்டு வரும்? யார் கொடுப்பார்கள்?

ராமு:—ஆமாம், எங்கோ தேடிக்கொண்டு வரும்போ...என்று பொறுமை இழந்தவனாய் சீறுவான்; ப்ரதிதினம் இவர்களிடையே பல கேள்விகள் எழும். தாங்களே பதிலும் அளித்துக்கொள் வார்கள்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன. ஆனால் குஞ்சுகளின் குரலோ, உருவமோ தெரியவே இல்லை. இவர்களுக்கு மூன்று தினமும் மூன்று யுகங்களாகவே தோன்றியது. தினத்திற்கு தினம் அவர்களின் ஆவல் அதிகரித்தது.

அதே சிந்தனையில் இருந்த குழந்தைகளுக்கு திடீர் என்று இவ்வளவு பக்ஷிகளுக்கும் எப்படி வயிறு நிறைய உணவு கிடைக்கும் என்கிற சந்தேகம் எழுந்தது. ஒருவேளை குழந்தைகளுக்கு வேண்டிய ஆகாரம் கிடைக்காமல் இறந்துவிடுமோ என்று பயம் கிளம்பியது.

ஐயோ! குருவிகளுக்கு ஆகாரம் இல்லாது இறந்துவிடுமோ! என்ற பயத்தில் இருவர் உள்ளங்களும் துடித்தன. எப்படியும் ஒருவழி கண்டுபிடித்து பட்சிகளை ரட்சிப்பது என்று தீர்மானித் தார்கள்.

உஷா பரபரப்புடன் ராமுவின் தோளைப் பிடித்துக்கொண்டு, ராமு, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதன் கூண்டின் அருகில் மரத்தின் மேல் நாம் ஏதாவது ஆகாரம் வைத்து விட்டால் அது அலையாது குஞ்சுகளுக்கும் கொடுத்து தானும் சாப்பிடும் இல்லையா? அம்மாவுக்குத் தெரியாது ஆகாரம் கொண்டு வரலாமா என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

ராமு சந்தோஷம் பொங்க, ஆமாம் உஷா! சரியான யோசனை. அங்கு ஆகாரம் வைப்பதோடு ஒரு கிண்ணத்தில் ஜலம் வைத்து விட்டால் இன்னும் நல்லது. குருவிகள் அலையாது சுகமாக குஞ்சு

களைக் காப்பாற்றும் வா. எந்த இடத்தில் வைத்தால் குருவி எடுத்துக்கொண்டுபோகும் என்று பார்க்கலாம் வா; என்று உஷாவை அழைத்துக்கொண்டு வராண்டாவில் வந்தான்.

உஷா தன் கூர்மையான கண்களால் நாலாபுறமும் துளாவத் துடங்கினுள். குருவிக்கூண்டின்மேல்வெய்யில்பலமாகப்படுவதைக் கவனித்த உஷா துள்ளியவாறு, ராமு! அதோபார் குருவிக்குஞ்சு களின் மேல் வெய்யில் எப்படி தீட்சண்யமாய்ப்படுகிறது. பாவம். அவை வெய்யிலில் இறந்து போனல் என்ன செய்வது? என்று வருந்தினுள்.

உஷா சொன்ன பிறகே கவனித்த ராமு, ஆமாம் உஷா. பாவம் அவைகளுக்கு நிழலுக்கு என்ன செய்வது? என்று யோசிக்கத் துடங்கினன்.

இருவரும் பலமாக யோசிக்கத்துடங்கினர்கள். எப்படியாவது ஒரு துணியால் குடைபோல் செய்து கூண்டின் பக்கம் கட்டி நிழல் வரவழிக்கச்செய்யலாம் என்று முடிவுசெய்தார்கள். உஷா உடனே அம்மா கண்ணில் படாது அரிசி எடுத்துவந்தாள். ராமு தாதி யின் கண்ணில் தட்டுப்படாது கிண்ணம் எடுத்துவந்தான். குடை செய்யப் பழைய துணிக்கு என்ன செய்வது என்ற கேள்வி கிளம்பியது.

துணிகிடைத்தாலும் குடை நம்மால் எப்படிச் செய்யமுடியும். அதற்குக் கம்பிகள் தயார்செய்யவேண்டும்! அதன்மேல் துணி யைத் தைக்கவேண்டும். நம்மால் முடியுமா! என்ற குழப்பம் பலமாய் எழுந்தது. அவ்வளவுதான் சகோதர சகோதரி கமிட்டி கூடி ஞர்கள்.

இருவர் மூளையும் பலமாய் வேலை செய்யத் தொடங்கியது. பலமான சர்ச்சை நடந்தது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவர் களாய் எழுந்தார்கள். ராமு கோட்டையைப் பிடித்த வீரனைப் போல், உஷா ஊம்! சீக்கிரம் போய் ஒரு பழம் கூடை பார்த்துக் கொண்டு வா! என்று உத்திரவிட்டான். சிட்டைப்போல் பறந்த உஷா அடுத்த விநாடி ஒரு பொத்தல் கூடையுடன் ஆஜரானுள். உஷா வருத்தத்துடன் ராமு இந்தக் கூடை பொத்தலாய் இருக் கிறதே. அதன் வழியாய் வெய்யில் குஞ்சுகளின்மேல் படுமே? என்ன செய்வது? என்று கேட்டாள்.

கூடையை வாங்கிப் பார்த்த ராமு, அப்பா இவ்வளவுதானே. இதில் காகிதமோ, துணியோ வைத்து அடைத்தால் சரியாய் விடும், வெய்யில் வரவே வராது. அப்பாடி! இந்தக் கூடையை மறைவு வைத்துவிட்டால் குஞ்சுகள் நிம்மதியாய் வளரும் என்று திருப்தியோடு சொல்லியவாறு ஒரு விறகு சுள்ளியையும் எடுத்துக் கொண்டு வராண்டாவை அடைந்தான்.

இதோ பார் உஷா! கூண்டின் பக்கத்தில் இந்தக்கூடை இப்படித்தான் நிற்கும் என்று கூடையைக் குச்சியில் நிற்க வைத் துக் காண்பித்தான். உஷா தன் பற்களைப் பூராவும் காட்டி, பலே ஜோர்! ராமு நீ மகா புத்திசாலி! என்று அண்ணனை ப்ரமாதமாய்க் கொண்டாடினுள்.

இதற்குள் மணி 12 அடித்தது. உள்ளே இருந்து தாயார் கூப்பிடும் குரல் கேட்ட சிறுவர்கள் சாமான்களைப் பத்திரப்படுத்தி விட்டு ஓடினார்கள். குளித்து, சாப்பிட்டு, தாயாருடன் கூடத்திற்கு வந்தார்கள். தாயார் இருவரையும் பார்த்து, இதோ பாருங்கள். இன்று வெய்யில் ரொம்ப அதிகமாய் இருக்கிறது. வெளியே போகவே கூடாது. 4 மணி ஆகும்வரை நிம்மதியாய்த் தூங்குங்கள் என்று படுக்கை போட்டு, படுக்கச் செய்து, தானும்கூட படுத்துக்கொண்டாள்.

தாயார் உத்திரவை மீறப் பயந்த குழந்தைகள் தூக்கம் வரா விட்டாலும் வாயைத் திறக்காது படுத்தார்கள். ஆனால் மனம் நிம்மதி அற்றுத் தவித்தது. தூங்குவதுபோல் பாசாங்கு செய்த வாறு படுத்து இருந்தார்கள்.

அம்மா தூங்கினாள் என்று அறிந்ததுதான் தாமதம். இருவரும் ஓசை செய்யாது பூனைபோல் அடிமேல் அடிவைத்து வராண்டாவை அடைந்தார்கள். மிகவும் ஜாக்கிரதையாய் முட்டைகளைக் காக்கும் வேலையில் ஈடுபட்டார்கள்.

வராண்டாவின் உச்சியில் கூண்டு இருந்தது. இவர்களோ குழந்தைகள். எப்படி அவ்வளவு உயரத்தில் ஏறுவது. ஏணி வீட்டில் இல்லை. திரும்பவும் ஒரே குழப்பம்.

ராமு விறுவிறு என்று உள்ளே சென்று சப்தம் செய்யாது நாற்காலி எடுத்து வந்தான். அதன்மேல் ஏறியும் கூண்டு எட்டினபாடு இல்லை. அதற்கு மேல் உயரத்தை அதிகப்படுத்த முயற்சித்தார்கள். உஷா கிணற்றங்கரையில் இருக்கும் சில செங் கல்களை எடுத்து வந்தாள். அதை நாற்காலி மேல் வைத்து ராமு உயரத்தில் ஏறினான்.

ஏறி பார்ப்பதற்குள் அவன் உள்ளம் ஆர்வத்தால் துடிதுடித் துக்கொண்டு இருந்தது. அழகான மூன்று முட்டைகளைப் பார்த்த அவன் விழிகள் ஆனந்தத்தால் விரிந்தது.

பொறுமை இழந்த உஷா...ராமு எத்தனை முட்டைகள் இருக் கிறது. அழகாய் இருக்கிறதா? குஞ்சு வெளி வந்துவிட்டதா? என்று ஆர்வம் பொங்க அடுக்கடுக்காய்க் கேட்டாள்.

உஷ், கத்தாதே... அம்மா எழுந்துவிடப் போகிறாள். கடைசி யில் எல்லாக் காரியமும் கெட்டுவிடும். மூன்று அழகான முட்டை கள் இருக்கிறது உஷா. பாவம்...இவை வெறும் குச்சி, குப்பை களின்மேல் கிடக்கிறது. ஒரு துணி எடுத்துக்கொண்டு வா. மெத்தென்று மடித்துப்போட்டு முட்டைகளை அதன்மேல் வைக்க லாம் என்றான். வார்த்தை முடிவதற்குள் உஷா ஓடிச்சென்று தந்தையின் பழைய வேஷ்டியில் இருந்து ஒரு துண்டு கிழித்து எடுத்து வந்து ராமுவிடம் கொடுத்தாள். ராமு வைக்கும்போது ஸ்டூல் ஆடாதவாறு கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

ராமு ஜாக்கிரதையாய் முட்டைகளை எடுத்துத் துணியைக் கூண்டில் மெத்தென்று போட்டு முட்டைகளை அதன் மேல் வைத் தான்.

உஷாவுக்கோ முட்டைகளைப் பார்க்கவேண்டும் என்று ஆசை துடித்தது. பொல்லாத ராமு காண்பித்தால்தானே. கெஞ்சிய

குரலில், ராமு! ஒரே ஒருதரம் அந்த முட்டையைக் காண்பிடா! என்று கேட்டாள்.

ராமு அலக்ஷ்ய பாவத்துடன் பைத்தியமே, கேட்டிருந்தால் அப்போதே காண்பித்து இருப்பேனே. சரி. நீ முதலில் கூடையும், குச்சியும் எடுத்துக்கொடு என்றான்.

உஷா அவைகளைக்கொடுத்தவாறே, ராமு நீ இந்தக் கூடையை வைத்துவிட்டு கீழே இறங்கு, பிறகு நான் ஏறிப்பார்க்கிறேன் என்ன?—என்று கெஞ்சினாள். ராமு எதுவும் பதில் பேசாது கூடையை குடைபோல் நிற்கவைக்கும் வேலையில் மும்முரமாய் ஈடுபட்டான். எப்படியோ கூடையை நிற்கவைத்ததுதான் தாமதம்; அவன் சந்தோஷம் எல்லை மீறியது. உஷா! சீக்கிரம் கிண்ணியில் ஜலம், அரிசியைக் கொடு. அம்மா எழுந்து பார்த்தால் உதைப்பாள் என்று துரிதப் படுத்தினான். உஷாவும் பரபரப்போடு ராமுவிடம் ஜலத்துடன் கிண்ணம், அரிசியைக் கொடுத்தாள். ஜாக்ரதையாய் வைத்துவிட்டு, ராமு ஸ்டூலில் இருந்து இறங்கினான்.

உஷா, ராமு இறங்கினதும் இறங்காததுமாய் ஸ்டூல் மேல் ஏற ப்ரயத்தனப்பட்டாள். ராமு! பிடித்துக்கொள். நான் ஒரே ஒரு தடவை பார்த்துவிட்டு இறங்கிவிடுகிறேன் என்றாள்.

ராமு:—வேண்டாம்...வேண்டாம் உஷா நீ தவறி விழுந்து விட்டால்!

உஷா கோபம் பொங்க, பார்த்தாயா? இவ்வளவு நேரம் நான் உனக்கு ஸ்டூல் பிடித்துக்கொண்டு நிற்கவில்லையா? நீ ஒரு நிமிஷம் பிடி ராமு...நான் பார்த்துவிட்டு இறங்கிவிடுகிறேன். ரொம்ப ஆசையாய் இருக்கு ராமு என்று கெஞ்சினாள்.

ராமு:—வேண்டாம் உஷா; உன்னை நான் ஏறவிடவே மாட்டேன். நீ எங்காவது கீழே விழுந்தால் அம்மா என்னை கொன்று விடுவாள். முடியவேமுடியாது. என்று சற்றும் இறக்கம் இல்லாது செங்கல்லை எடுத்துப் போட்டுவிட்டு ஸ்டூலை அப்புற படுத்தினான்.

உஷா ஸ்டூலை பிடித்துக்கொண்டு, ராமு...ராமு: நான் விழாது பத்திரமாய் ஏறுகிறேன். விழுந்தாலும் நானே விழுந்தேன் என்று அம்மாவிடம் சொல்கிறேன் ராமு கொஞ்சம் பிடித்துக்கொள்ளேன் என்று விடாபிடியாய் மன்றாடினாள்.

ராமு:—ஐயயோ...போதும்...போதும். அவள் தான் குழந்தை ஏறினால், தடியன் நீ என்ன செய்தாய் என்று அம்மா இன்னும் இரண்டு உதைகூட கொடுப்பாள். முடியவே முடியாது என்று ஸ்டூலை எடுத்துக்கொண்டு உள்ளே ஓடினான்.

குழந்தை உள்ளம் தவிக்க உஷா "கோ"வென்று அழத் துடங்கினாள். ராமு அவள் வாயை இருக்க மூடி சமாதானம் செய்தான். உஷா விம்மியவாறு ஆகட்டும் நீ எனக்கு முட்டை காட்டாது தானே ஏமாற்றினாய். இதை எல்லாம் அம்மா எழுந்ததும் சொல்லிவிடுகிறேன் ஆகட்டும்; நன்றாய் உதை வாங்கி வைக்கிறேன் என்று கருவினாள்.

எதற்கும் சளைக்காத ராமு...ஊம் சொல்லு பார்க்கலாம், சொன்னுயோ உன் முதுகுத் தோல்உரியும்படி உதைகொடுப்பேன். ஜாக்கிரதை! இந்த ராமுவை என்னவென்று நினைத்தாய்? என்று பயம் காண்பித்தான். கண்களில் நீர் முட்ட உஷா பின்பு ஏன் எனக்குக் காண்பிக்க மறுத்தாய்? என்று அழுதாள்.

ராமு:—ஆமாம் நீ விழுந்து பல்லை உடைத்துக்கொண்டால் யார் அவஸ்தைப் படுவது.

உஷா:—போனால் போகட்டும்; அதைப்பற்றி உனக்கு என்ன; நான் அம்மாவிடம் சொல்லத்தான் போகிறேன்.

இப்படி இருவரும் மல்யுத்தத்தில் இறங்கினுர்கள். இதற்குள் குருவிகள் தங்கள் கூண்டு அருகில் வருவதும் அங்குவர பயந்து கத்திகத்தி த்வனியைக் கிளப்பியவாறு ஓடுவதுமாய் இருந்தது. இதைகவனித்த ராமு ஒன்றும் புரியாது, வா உஷா நாம் இருப்பதால் குருவிகள் கூண்டு அருகில் போகாது கத்துகிறது. உள்ளே வா என்று கையைப் பிடித்திழுத்துக்கொண்டு போனுன். போகும் வேகத்தில் கதவின்மேல் முட்டிக்கொண்டு தடார் என்று ஓசை கிளம்பியது.

இவ்வளவு நேரம் அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்த அவர்களின் தாயார் ஓசை கேட்டு அலறியவாறு எழுந்தாள். இருவரும் வெய்யிலில் அலைந்து திருடர்களைப்போல் முழிப்பதைப் பார்த்து சரமாறியாய்த் திட்டி படுக்கையில் கொண்டு தள்ளினுள்.

காரியத்தைச் செய்து முடித்த சிறுவர்கள் நிம்மதியுடன் தூங்கி விட்டார்கள்.

மணி டாங்...டாங் என்று நாலு அடித்தது. தூக்கத்தில் இருந்து விழித்த உஷா பரபரப்புடன் வெராண்டாவுக்குஓடினுள். அங்கு அவள் கண்ட காட்சி ப்ரமிக்கச் செய்தது. சிரமப்பட்டு வைத்த கூடை அங்குக் காணவில்லை; ஓடிச்சென்று நாலுபுறமும் தேடிப் பார்த்தாள். கீழே மூன்று முட்டைகளும் உடைந்து சிதறிக் கிடப்பதைப் பார்த்து பதறிய உஷாஓடிசென்று தூங்கும்ராமுவை எழுப்பி, ராமு! முட்டைகள் கீழே விழுந்து உடைந்து இருக்கிறது. குஞ்சுகள் பறந்து போய்விட்டது என்று மூச்சு விடாது சொன்னுள். ஒன்றும் புரியாத ராமு விழுந்தடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தான். உடைந்த முட்டைகளைப் பார்த்த அவன் மனம் நூறு சுக்கலாய்ச் சிதறியது. பயத்தால் முகம் வெளுத்து சரீரம் நடுங்கியது. பரிதாபத்தோடு உடைந்த முட்டைகளைப் பார்த்தவாறு கல்லாய்ச், சமைந்தான்.

ஒன்றும் அறியாத உஷா, ராமு! அதில் இருந்த குஞ்சுகள் எங்கே பறந்து இருக்கும்?

ராமு:—ஊம் குஞ்சுகள் ஏது? முட்டையேதான் உடைந்து விட்டதே!

உஷா:—முட்டை உடைந்தால், அதில் இருந்த குஞ்சு எங்கே காணும்? என்று மறுபடியும் கேட்டாள்.

ராமு:—குஞ்சு உன் தலைமேல் இருக்கிறது! என்று ஆத்திரம் பொங்க, சொன்னுன்.

கூடம் பக்கம் வந்த அவர்கள் தாயார் குழந்தைகளின் சம்பாஷணையைக் கேட்டு வராண்டாவுக்கு வந்தாள். முகம் சிவக்க

வெய்யிலில் நிற்கும் குழந்தைகளைப் பார்த்த தாயார் திட்டியவாறு உள்ளே அழைத்தாள்.

இதற்குள் உஷா அம்மா... அம்மா அதோ பார்! குருவி முட்டைகள் உடைந்து கிடக்கிறது என்று சிதறிய முட்டையின் பக்கம் சுட்டிக் காட்டினாள்.

உடைந்து சிதறிய முட்டைகளையும், அதைச் சுற்றி, குருவிகளின் பரிதாபமான கத்தலையும் கவனித்த தாயார் கோபத்தோடு, சனியன்களே! இந்த முட்டைகளை நீங்கள் தொட்டீர்களா என்ன? என்று பயந்தவாறு கேட்டாள்.

உஷா:—ராமு அந்த முட்டைகளை நன்றாய்த் தொட்டான் அம்மா என்று யோசிக்காமல் பதில் உரைத்தாள். பிறகுதான் அம்மாவிடம் சொன்னால் உன் முதுகுத்தோலை எடுத்துவிடுவேன் என்று ராமு சொன்னது ஞாபகத்தில் வந்தது. இருந்தும் ஏனோ அவளுக்கு ராமுவினிடத்தில் இரக்கம் ஏற்படவில்லை. அவனால் தானே முட்டைகள் வீணாகியது என்ற கோபம் எழுந்தது.

கோபத்தால் கண்கள் தீமைக்கக்க ராமுவின் கையைப்பிடித்து அவன் தாய், ராமு நீ நிஜமாய் முட்டைகளைத் தொட்டாயா! அவ்வளவு உயரம் எப்படி உனக்கு எட்டியது. உண்மையைச் சொல்லு என்று மிரட்டினாள். ராமு ஒன்றும் பதில் சொல்லாது கடுவாம் பூனையைப்போல் முழித்தான்.

இதற்குள் உஷா... அம்மா அவன் ஸ்டூல் மேல் செங்கல்களை அடுக்கி அதன்மேல்ஏறித்தான் முட்டைகளைத்தொட்டான் என்று நடந்த விஷயம் பூராவும் மூச்சுவிடாது சொல்லி முடித்தாள்.

ஆத்திரமும், துக்கமும் தொண்டையை அடைக்க ராமு, நீயும் தானே உஷா ஸ்டூலை விழாதவாறு பிடித்துக்கொண்டு எல்லா உதவியும் செய்தாய்? இருவருமாகத்தானே எல்லாம் செய்தோம் என்று சீறினான்.

உஷா சளைக்காதவளாய் நீதானே முதலில் இப்படி செய்யலாம் என்று ஆரம்பித்தாய். நீதான் காரணம் என்று சாதித்தாள்.

அன்பு காட்ட அது அமளியாய் முடிந்ததைப் பார்த்த தாய் பரிதாபத்துடன், அடே மூடங்களே! உங்களுக்கு இவ்வளவு துணிச்சல் வந்து விட்டதா? மனிதர்கள் தொட்டு அசுத்தம் செய்த முட்டையை குருவிகள் மறுபடியும் தொடும் என்று நான் கேள்விப்பட்டதே இல்லை. நாம் தொட்ட பிறகு அவை முட்டை பொறிக்கவே பொறிக்காது. உன் அறியாமையால் மூன்று உயிர்கள் சேதமாகி விட்டது. அந்த பாவம் உன்னை சும்மா விடுமா? என்று மிரட்டினாள்.

ராமு தான் இழைத்த தப்பை உணர்ந்து கண்ணீர் முட்ட தாயின் முகத்தை பரிதாபமாய்ப் பார்த்தான். உஷா தாயின் தலைப்பை இழுத்து அம்மா... அப்படி என்றால் இந்த முட்டைகளை குருவிதான் தள்ளி உடைத்து விட்டதா? என்று கேட்டாள். வெகுண்ட தாயார், பின்பு என்ன? உங்கள் துஷ்டத்தனத்திற்கு மூன்று உயிர்கள் பலியாய் விட்டது. மகாபாபம் என்றாள்.

ராமு அழுதுக்கொண்டே, அம்மா! நான் குஞ்சுகளை சுகமாகக் காப்பாற்ற வேண்டும் என்று செய்யப்போய் இப்படியாய் விட்டது.

வாழ்க்கையில் ஒரு குறிப்பு

எங்கள் வீட்டை ஒருநாள் ஒழித்து ஒட்டடை யடித்துப் பெருக்கினேன்; மூலைமுடுக்குகளையும் பெட்டிகளையும் கிளறும் போது உபயோகமத்த சாமான்கள் பலவும் உபயோகமான சாமான்கள் சிலவும் கிடைத்தன. முதலில் குப்பையுடன் குப்பையாக அதைப் போட்டுவிட்டேன். பிறகு குப்பைகளை அள்ளும்போது அந்த நோட்டுப் புத்தகத்திலிருந்த இரண்டு வரிகள என் கண்களில் பளிச்சென்று பட்டதுதான் தாமதம்; உடனே அதைப் பார்த்தேன். "என் வாழ்வின் விளக்கை ஏற்றி வைத்த தோத்திரமாலை" என்கிற வரிகள் என்னிதயத்தில் பசுமரத் தாணிபோல் பதிந்தன. அந்தப் நோட்டுப் புத்தகத்தை உதறி, கண்களில் ஒத்திக்கொண்டு, பிரித்துப் பூராவும் பார்க்கும் ஸ்வாரஸ்யத்தில் குப்பை கூளங்களை வாரிப்போடுவதைக் கூட மறந்துவிட்டேன். பழமையான நோட்டுப் புத்தகத்தில் வாழ்வின் புதுமையை விளக்கி புத்துயிரளிக்கும் மங்கள ச்லோகங்களும் அதனடியில் சில குறிப்புகளும் இருந்தன.

"லக்ஷ்மீ! மனத்தைத் தளரவிட்டுவிடாதே! தைரிய லக்ஷ்மியை இதயத்தில் ஆவாகனம் செய்துகொண்டு திட சித்தத்துடன் இரு. இதோடு நான் அனுப்பியுள்ள ச்லோகங்களை நான் எழுதியுள்ளபடியே நேம நிஷ்டையுடன் சொல்லி வ்ருதம் அனுஷ்டித்து வா; கட்டாயம் பலன் கிடைக்கும். எனக்கு ஒரு மகான் சொல்லி நான்செய்து பலனடைந்தேன். அதை உனக்கு எழுதுகிறேன். அதை பயபக்தியுடன் செய்து பயனடை. அதாவது, ஒரு நல்ல நாளைப்பார்த்து மண்டல பூஜையை ஆரம்பம் செய். வெள்ளிக்கிழமையாக இருந்தால் நல்லது...."

என்ற வரையில்தான் படிப்பதற்குப் பொறுமை இருந்தது. அதற்கு மேல் படிக்க மனம் செல்லவில்லை. ஏதோ பூஜை, வ்ருதம, பட்டினி, உபவாஸம் முதலிய ஏதோ எழுதியிருக்கும். இதைப்பற்றி இப்போது நமக்கு எதற்கு? நமக்கு எனனவோ எத்தகைய குறையும் இல்லை; தகப்பனா ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பதால் மாதாமாதம் எனக்கு 50 ரூபாய் டாண்டான் என்று வந்துவிடுகிறது. கணவனுக்கும் மாதம்

முட்டைகளைத் தொடக்கூடாது என்று எனக்குத் தெரியாது. நான் செய்தது தப்புதான என்று மன்னிப்புக் கேட்டான்.

சிரித்துக் கொண்டே அவன் தாயார் ஊம். இனி நீ என்ன சொல்லி பலன் என்ன போ கடவுளிடம் மன்னிப்புகேள் என்று சொன்னாள்.

குருவிகளின் பரிதாபமான கூக்குரல் எல்லோர் உள்ளத்தையும் கலக்கியது. ராமு பல தினங்களவரை தன் தப்பை நினைத்து வருந்தினான். குருவிகள் சில தினங்களிலேயே வராண்டாவுக்கு வருவதை நிறுத்திக்கொண்டன. அவைகள் வராவிட்டாலும் வராண்டாவுக்கு ராமு, உஷா வரும்போதெல்லாம் குழந்தைகளின் உள்ளம் முட்டைகளை நினைத்து வருந்தாமல் இல்லை. அதுவே செய்த பிழைக்கு ப்ராயச்சித்தம.

பிறந்தால் 300 ரூபாய் வருகிறது; சாப்பாட்டுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, வத்தல் வடாம் ஊரிலிருந்து வருகிறது, எனக்கென்ன குறைவு! என்று ஒரு மாதிரி அசட்டு எண்ணத்துடன் அந்த கோட்டுப் புத்தகத்தைப் படிக்காமல்—ஆனால் குப்பையில் போடாமல்—பெட்டியில் வைத்து விட்டேன். வருஷங்கள் ஓடி ஒளிந்துவிட்டன.

எனக்கும் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தாயிற்று. அப்பா ரிடயர்டு ஆன பிறகு 50 ரூபாய் வருவது நின்று விட்டது. போதாக் காலக் கொடுமையால் விளைவு குறைந்த தால் அரிசி முதலிய தான்யங்கள் வருவதும் நின்றுவிட்டது. அப்போதுதான் உலகசண்டை ஆரம்பமாகியது. திடீரென்று என் கணவரை வெளியூருக்கு—சண்டை நடக்கும் இடத்திற்கு—மாற்றிவிட்டார்கள். அங்கு போனால் போ! இல்லையேல் வேலையே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அப்போதுதான் என்னுடைய நிலைமை மிகவும் கஷ்டமாகிவிட்டது.

உன் கணவன் யுத்த காலத்தில் போனால் நல்லபடி திரும்பி வருவானா...என்று சிலர் கலக்கிவிட்டார்கள். சிலரோ! ஒரு பயமும் இல்லை. போய் வந்தால் புகழ், பணம் சகலமும் வரும் என்று உத்ஸாகப் படுத்தினார்கள்; என் கணவரோ போகத்தான் போகிறேன் என்றார். என் மனமோ இடங் கொடுக்கவில்லை; அவருடைய பிடிவாதமும் மாறவில்லை; நாளோ நெருங்கிவிட்டது. உனக்கு பயமே வேண்டாம். ஆதியில் 1914 வருஷம் நடந்த யுத்தத்தில் எங்கப்பா டாக்டராகையால் யுத்த களத்தருகிலேயே போகும்படி நேர்ந்ததாம்; அம்மா அவர் ஸௌக்யமாய்ப் போய்வரும்படியும் தன் மாங்கல்யம் மலைபோல வளரவும் தன் சினேகிதியின் மூலம் கற்றபடி பூஜை செய்தாளாம்; எங்கப்பா அந்த காலத்திலேயே 2000 ரூபாய் சம்பளத்தில் சொஸ்தமாக வந்து விட்டார்; அதுபோல் நீயும் செய்து வா! எங்கம்மா அவைகளை ஒரு சிறிய நோட்டில்கூட எழுதி குலதனமாக வைத்திருந்தாள்; தேடிப் பாரு என்று உறுதியாகக் கூறியபோதுதான் முன்பொருநாள் கிடைத்த பழய நோட்டுப் புத்தகத்தின் சிறப்பும் பெருமையும் நன்றாக மனத்தில் வேரூன்றியது.

மாங்கல்ய ஸ்தவத்தின் தோத்திரங்களையும் ஸ்ரீ ஸ்துதியையும் இடைவிடாது நாளும் என் மாமியார் செய்ததுபோல் பூஜைசெய்து வ்ருதம் அனுஷ்டித்தேன்; கடவுள்க்ருபையால் அவர் ஸௌக்யமாகத் திரும்பிவந்ததோடு பெரும்புகழும் சம்பளம் உத்யோகம் உயர்வும்கூடக் கொண்டுவந்தார். வீட்டை சுத்தம் செய்த அன்று கிடைத்த அந்த நோட்டு புத்தகம் என் வாழ்க்கை விளக்கையும் ஏற்றிவைத்தது. மாங்கல்ய ஸ்தவத்தையும், ஸ்ரீ ஸ்துதியையும் பெண்களாகிய நாம் கட்டாயம் தினப்படி பாராயணம் செய்துவந்தால் எந்த பீடையும் அணுகாது என்பது என்னுடைய நம்பிக்கை.

அறிவுப் போட்டி நெ. 1.

கீழே உள்ள 10 வரிகளுக்குள் ஒரு உயர்ந்த கவி, ஒரு புண்ய க்ஷேத்திரம், ஒரு சிறந்த ஆசிரியர் ஆக மூன்றும் மறைந்திருக்கின்றதை ஒரு வரிக்கு ஒரு அக்ஷரம் வீதம் எடுத்துக்கண்டு பிடிக்கவும். ஒன்றுமட்டும் 9 வரியிலேயே அடங்கும்.

1. கதிரவன் குலத்தோன் ஸ்ரீ ராமசந்திரன்
2. எதுகுல வீரன் ருக்மிணீ காந்தன்
3. ராஜ மகா தந்த்ரி அருமை ராஜாஜி
4. கஷ்டத்தின் எல்லையில் களிப்பின் ஜோதி
5. சிறந்த எண்ணத்தின் சிகரமே சிறப்பாம்
6. சமூகத்திருப்பணி நானிலமுகக்கும்
7. சத்தியம் தருமம் மார்க்கதரிசியாம்
8. தாம்பத்ய வாழ்வே ஆனந்தப் பதவி
9. திருக் கூட்டத்தின்பமே திருநாளின் பெருமை
10. அமைதியின் நன்மை ஆர்வத்தின் எதிரொலி

சரியான விடை அடுத்த இதழில்.

[25—10—55க்குள் ஷை கட்டத்திலேயே சரியான எழுத்துக்களை அடியில் கோடிட்டு குறிப்பிட்டு அனுப்பவேண்டும். சரியான விடை அனுப்புவோரின் பெயர்கள் அடுத்த இதழில் ப்ரசுரிக்கப்படும்.]

எனது பாண தீர்த்த யாத்திரை அனுபவம்

பிரிய ஆண்டாள்,

நானும் ஜெயம்மாவும் எங்கள் பாணதீர்த்த யாத்திரையை கடவுள் அனுக்கிரஹத்தால் சுகமே முடித்துக்கொண்டு திரும்பினோம். நீ கூட வராத ஒரே குறை தவிர மற்றபடி நாங்கள் எண்ணிப்போனதைவிட மிகவும் அதிகப்படி இடங்களை மிக சவுகரியமாய்ப் பார்த்து வந்தோம். உனக்கு இதைப்பற்றி அறிய ஆவலாயிருக்குமென்று எழுதுகிறேன்.

நாங்கள் 14-7-'55 வியாழன் தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் புறப்பட்டோமா? நீங்கள் எங்களை வழியனுப்ப வந்தது எவ்வளவோ உத்ஸாகமாய் இருந்தது. 15-7-'55 வெள்ளி காலை அம்பாத்துறையில் இறங்கினோம். அவ்விடம் நம் தோழி வண்டியுடன் காத்திருந்தாள். நேரே அவள் வீடு சென்று காலைக்கடன்களை முடித்துக்கொண்டு காபி, பலகாரம் சாப்பிட்டோம். பிறகு காந்திக்கிராமம் சென்று அவ்விடம் நடக்கும் நல்ல காரியங்களை அதாவது ஆதாரக்கல்வி, கிராம ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் இடம், நூற்பு, நெசவு, காகிதத்தொழில் முதலியவைகளைப் பார்த்துக்கொண்டு, சின்னாளபட்டிக்குப் பகல் திரும்பினோம். அவ்விடம் சாப்பாட்டை

முடித்துக்கொண்டு பஸ்ஸிலேயே மதுரை சென்றோம், மதுரையம்பதியில் கல்வி ஸ்தாபனங்கள், பெண்கள் சங்கங்கள் இவைகளையும், திருமலை நாயகன் மஹால், வண்டியூர் தெப்பக்குளம், நம் கிறிஸ்தவ சகோதரர்கள் நடத்தும் பள்ளிகள், தொழில் சாலைகள், வைத்தியசாலைகள் இவைகளையும் வெளிச்சம் இருக்கும்வரை பார்த்துக்கொண்டோம். அன்று (15-7-'55) ஆடி வெள்ளிக்கிழமை ஆதலால் ஸ்ரீமீனாக்ஷி கோவிலில் அம்பாளுக்கும் கணபதிக்கும் விசேஷ அலங்காரங்கள் செய்திருந்தார்கள். திவ்ய தரிசனம் கிடைத்தது.

இரவு ஒரு பந்துவின் வீட்டில் தங்கிவிட்டு (16-7-'55) சனிக்கிழமை காலை திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் தென் காசிக்குப் புறப்பட்டோம். நம் தமிழ் நாடாகையால் அவ்விடம் சேர நடுப்பகலுக்கு மேலானாலும் பசி தெரியாமல் அங்கங்கு நல்ல சுத்தமான ஆகாரங்களும், பானங்களும் இடைத்துக்கொண்டே இருந்தன. (இதை எதற்கு எழுதுகிறேன் என்றால் சென்ற வருஷம் நாம் பதரிகாசிரமம் போகையில் சாப்பாட்டிற்குப் பட்ட கஷ்டம் நினைவு வந்தது.) நடுப்பகல் தென்காசி சேர்ந்ததும் குற்றாலம் செல்ல வேண்டிய பஸ்கள் புறப்பட சற்று நாழியாகும் என்று தெரிந்தது, அங்கிருந்து அநேகம் சர்விஸுகள் குற்றாலத்திற்குப் பஸ் விடுகின்றன. அவ்விடம் காத்திருந்தவர்களை அதைப்பற்றி விசாரித்தோம். அவர்கள் சீக்கிரத்தில் ஒரு சர்விஸ் பஸ் போகுமென்றும், ஆனால் தாங்கள் அரை மணிக்குமேல் காத்திருந்து டி. வி. எஸ். பஸ்ஸில்தான் போகப் போவதாகவும் தெரிவித்தார்கள். இதிலிருந்து தங்க இடமின்றி வெய்யிலில் பசியோடு அரை மணி காத்திருந்து டி. வி. எஸ்., பஸ்ஸில்தான் ஏறுவோம் என்று அவர்களின் நம்பிக்கை அபிமானங்களுக்குப்பாத்திரமாகி இருக்கும் டி. வி. எஸ். சர்விஸைப்பற்றி பெருமைப்பட்டோம்.

அது சமயம் ஒரு புதுக்கார் ஸ்டேஷனுக்கு வந்து இரண்டே ஆள்களுடன் காத்திருந்தது. எனக்கும் ஜெயம்மாவுக்கும் குற்றாலம் ஸ்நானத்தில இருந்த ஆவலில் பஸ் வரும்வரை காக்க இஷ்டமில்லை. நாங்கள் ஒருவிதமாய் தைரியப்படுத்திக்கொண்டு அங்கு நின்ற புதுக்கார்காரர்களிடம் 'ரயிலோ போய்விட்டது, நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று விசாரித்தோம். அவர்கள் நாங்கள் வந்த ரயிலிலேயே பாண்டிச்சேரியிலிருந்து சில நண்பர்களை எதிர்பார்த்து அவர்களை அழைத்துப்போக வந்ததாகவும் நண்பர்கள் வரவில்லையாதலால் குற்றாலம் திரும்புகிறோம் என்றும் தெரிவித்தார்கள். கார் பெரிதானது. நாங்கள் அவர்களிடம் எங்களை ஏற்றிக்கொண்டு போக முடியுமா என்று கேட்டோம். அவர்கள் மிகவும் பிரியமாக 'கார் சும்மாத்தானே திரும்புகிறது. பேஷாக ஏறிக்கொள்ளுங்கள்' என்றார். ஜெயம்மா மட்டுமானால் யோசிக்க வேண்டும். நானோ அறுபது முடிந்த கிழவி. ஆகவே பயமின்றி ஏறிக்கொண்டோம். பத்து நிமிஷத்தில் குற்றாலம் சேர்ந்துவிட்டோம்.

எங்களுக்கு அவ்விடம் தங்குவதற்கும், சாப்பாட்டிற்கும் என் மருமகன் முன்பே ஏற்பாடு செய்திருந்தான். காரைவிட்டு இறங்கினதும் கார் சொந்தக்காரர்களுக்கு எங்கள் நன்றியைத்

தெரிவித்து அவர்கள் விலாசத்தைக் கேட்டோம். இறங்கும்வரை அவர் ஹிந்து என்றே நினைத்திருந்தோம். அவ்விடம் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. அவர் ஒரு முஸல்மான். பேர் யோகுப் ஹுசேன். சிங்கப்பூர், ஜாவா, கோலாலம்பூர் இவ்விடங்களுக்கு பாண்டிச்சேரியிலிருந்து வியாபாரம் செய்கிறவர் என்று தெரிந்து கொண்டோம். இதிலிருந்து அன்பு, அருள் என்ற கடவுள் தன்மை ஒன்றே. இதை உலகம் அறிந்து நடந்துகொண்டால் யாருக்கும் எங்கும் பயமில்லை என்பதைத் தெரிந்துகொண்டோம்.

குற்றாலத்தில் ஐந்தருவி, நம் ராஜாஜி நடந்து செல்லும் சிற்றருவி, ஷண்பக அடவி, கோவில் அருவி இவைகளை இரண்டு நாள் சுற்றி வந்தோம். 18-7-'55 திங்களன்று காலை பாபநாசம் செல்லும் பஸ்ஸில் கீழணைக்குப் புறப்பட்டோம். கீழணையில் பஸ் மாறி மேலணைக்குப் போனோம். அங்கு கூலிகள் கிடைப்பது அரிது. நாங்களும் அதைக் கேட்டிருந்தோமாகையால், மாற்று உடுப்பும், ஒன்றிரண்டு விரிப்புமே எடுத்துக்கொண்டு போனோம்.

19-7-'55 ஆடி அமாவாசை. பாணதீர்த்தம் என்ற தாமிர பரணியின் உற்பத்தி இடத்தில் விழும் அருவியிலும், ஆற்றிலும் ஸ்நானம் செய்தால் புண்யம் என்று சொல்வார்கள். பழைய நாளில் வாணுளைக் கொடுத்தாவது பாணதீர்த்தம் ஆடிவா என்பது கட்டளையாம். அவர்கள் அம்பாசமுத்ரம், பாபநாசம் முதலிய இடங்களிலிருந்தே கால்நடையாக காட்டுப்பாதையில் இருபது மைல்கள் சென்று நீராடி வருவார்களாம். இப்போது இக்கரைவரை பஸ் போகிறது. ஓடத்தில் ஆற்றைக் கடந்து விட்டால் ஒன்றிரண்டு மைல்கள்தான் நடக்க வேண்டியிருக்கும். இந்த தைரியத்தில் புறப்பட்டுவிட்டோம். பஸ் அப்பர் டாம். என்ற மேல் அணைக்கட்டின் கீழேயே நின்றுவிடுகிறது. சுமார் நூறு படிகள் ஏறி மேலிருக்கும் ஏரிபோல் தேங்கி நிற்கும் ஓடக் கரை செல்ல வேண்டும். இங்கு கூலி ஆள்கள் கிடையாது. நான் வயது சென்றவள் என்ற மரியாதைக்காக என்னிடம் தீர்த்த பாத்திரத்தையும், அவ்விடம் உட்கொள்ள எடுத்துப் போயிருந்த பழங்களையும் கொடுத்துவிட்டு ஜெயம்மாள் மாற்று உடைகள், குடைகள், விரிப்புகள் சேர்த்துக் கட்டிய மூட்டையை எடுத்துக் கொண்டு ஏற ஆரம்பித்தார். சில படிகள் ஏறுமுன்னேயே அவருக்கு மூச்சு திணற ஆரம்பித்துவிட்டது. அப்போதுதான் பதரி வழியில் ஒவ்வொரு கூலி ஆட்களும் நூறு பவுண்டு சுமையை எடுத்துச் செல்கிறார்களே. அவர்கள் கஷ்டம் எப்படி யிருக்கும் என்று தெரிந்தது. இதை நாங்கள் பேசிக்கொண் டிருக்கையிலேயே தென் திசையை தாழ்த்து வந்த அகத்திய முனிவரேபோல் ஒரு சிறுவன் ஓடிவந்து, அம்மா நான் ஓடக்கரை வரை இந்த மூட்டையை எடுத்து வருகிறேன். நீங்கள் இஷ்டப் பட்டதைக் கொடுங்கள் என்றான். அவன் உதவியில் ஓடக்கரை சென்றோம்.

ஒரு தடவைக்கு 30 பேருக்கு மேல் ஓடத்தில் ஏற்றி அக்கரை சேர்க்கிறார்கள். நாங்கள் முப்பது பேருக்கு மேல் ஏறி னோம். அதில் ஒன்றிரண்டு பேர்கள் 1950 சேர்மாதேவி சப்கலெக் டர் குடும்பம் தோணியில் ஏறி அக்கரை சேருமுன் மூழ்கிப்

போனதைப் பேச ஆரம்பித்தார்கள். இதனால் பிரயாணிகளுக்குள் பயம் ஏற்படலாயிற்று. உடனே நாங்கள் சிலர் ஒன்றுகூடி அவர்கள் மனதைத் திருப்ப பஜனை தோத்திரப் பாட்டுகளை ஆரம்பித்தோம். இது நல்ல பலன் அளித்து அனைவரும் பயத்தை மறந்து தாங்களும் கலந்துகொண்டு பூஜிக்கவும் பாடவும் ஆரம்பித்து விட்டார்கள். ஆக படகில் இருபது, முப்பது நிமிஷங்கள் சென்றதே தெரியாமல் அக்கரை சேர்ந்துவிட்டோம்.

பாணதீர்த்த கரை வெறும் காடு; தங்க, கட்டடமோ குடிசையோகூடக் கிடையாது; முன்னாளில் சிங்கம்பட்டி ஜமீன்தார் புல்லுப்பிறை என்று அவர் செலவில் அங்கங்கு அவ்விடத்து கழிகளை வெட்டி நட்டு புல்லை நறுக்கி வேய்ந்து வந்தவர்கள் தங்க வசதி செய்வதுண்டு. இப்போது அதுவும் என்ன காரணத்தாலோ நின்று விட்டது.

நாங்கள் அவ்விடம் 18—7—55 திங்கள் பகல் 2-30க்கு சேர்ந்தோம்; நாங்கள் எண்ணிப் போனது 19—7—55தான் அமாவாசை யானாலும் அன்று ஓடத்தில் போக இடநெருக்கம் இருக்கும்; முதல் நாள் போக ஒரு இரவு பட்டினி இருந்தாலும் அமாவாசை காலையில் ஸ்னானம் செய்து பாபனாசம் திரும்பி விடலாம் என்பது. அதன்படி போய் இறங்கினதும் ஸ்னானம் செய்து கரை யேறினால் நாலு பேர் வந்து 'வாங்கோ, வாங்கோ இலைபோட்டு பரிமாறியிருக்கிறோம்' என்றார்கள்; போய்ப் பார்த்தால் தஞ்சாவூர் ஜில்லா அன்னதான சிவன் மாதிரி ராமப்ரம்மம் எனும் ஒரு மகான் கல்லிடைக் குறிச்சிக்காரர் அனேகரிடம் யாசித்து அந்தக் காட்டில் உணவுப் பொருள்களுடனும், உதவி செய்யும் ஆள்களுடனும் மூன்று நாட்கள் முன்னாலே வந்து காடு திருத்தி மூங்கில் பாய்களினால் மறைவு அடைத்து ஆகாராதிகள் தயாரித்து 'வந்தவர்களை உபசரித்து உண்பிக்கும் புண்ய கைங்கரியம் செய்து வருகிறார். இது இருபது வருஷங்களாக நடக்கும் காரியமாம்; நாங்களும் காலை குற்றாலத்திலிருந்து புறப்பட்டவர்கள். பசியோ ஸ்னானங்களுக்குப்பின் தீவிரமாய் இருந்தது. பொய் பிகு ஒன்றும் சொல்லாமல் சோறு போடுபவர் சோமேசர் என்று உட்கார்ந்து விட்டோம். ஒரு கறி, கூட்டு, சாம்பார், இரசம் மோருடன் சம்பிரமமாக உணவளித்தார்கள்.

மூன்று மணிக்குள் ஆற்றுப் பாறைகளில் ஆயிரம் பேருக்கு மேல் கூடிவிட்டார். அவ்விடம் போக, பார்க்க வேறு இடமேது? அதனால் நாங்கள் சிலர் கூடி ஆற்றின் உற்பத்தி வழியில் சில தூரம் நடந்து அகஸ்தியர் கோயில் வரை சென்று திரும்பினோம். சில இடங்களில் மலை நெட்டுச் சுவர்போல் ஒரே மட்டமாய் சரிவேயில்லாமல் இருக்கிறது. அதில் ஏறிப்போக மேலிருந்து இரும்பு அழிகளைப்பாய்ச்சி சங்கலிகள் தொங்கவிட்டிருக்கிறார்கள். அவைகளின் வழியே ஏறினோம். திரும்பி ஸ்னான கட்டம் வர ஆறுமணியாகி விட்டது; 2-45க்கு சாப்பிட்ட ஆகாரமெல்லாம் மலை ஏறினதிலும் அருவி ஸ்னானத்திலும் பஸ்மீகரமாகி விட்டது. எங்களைக் கண்ட கல்லிடைக் குறிச்சி மகான் "விஷ்ணு ஸஹஸ்ரநாமம் தெரிந்தபேர் சொல்லுங்கோ; அதற்குள் இலை போடுகிறோம்" என்றார், பார்த்தோம்; வேளைக்கு முன் சாப்பிட்டால்

ஆற்றுப் பாறைகளில் சற்று வசதியான இடமாய்ப் பிடித்து இரவை வசதியாகக் கழிக்கலாம் என்று பட்டது. "உண்டிக்கு முந்து, சண்டைக்குப் பிந்து" என்று ஏழு மணிக்கு முதல் பந்தியில் சாப்பிட்டோம். நாலு பேராய் கூடி ஒரு நல்ல சமமான பாறையை பொறுக்கினோம். அதில் விரிப்பை விரித்தோம்; இதில் நானும் ஜெயம்மாவுமே குடைகள் விரிப்பு எடுத்து வந்தவர்கள்; ஸ்திரீகள் தலைப்பையும், புருஷர்கள் மேல் துண்டையும் விரித்தும், மற்ற ஆண்டி, பரதேசி நேரே பாறைகளிலுமே படுத்தார்கள். பகவத் சன்னிதானத்தில் யாவரும் சமம் என்பதற்கு அது ஒரு பாடமாக இருந்தது.

வந்திருந்தவர்களில் ஒருவர் தனக்கு பஜனை செய்து பழக்க முண்டு என்றார். நாங்கள் இருந்த பாறை சற்று சமதளமாய் இருந்ததால் அதில் பஜனை நடத்த எங்கள் அபிப்ராயத்தை அறிய விரும்பினமாதிரி தோன்றிற்று. எங்களுக்கும் அந்த ஆற்று வெளியில் காட்டு மிருகங்களை பயமுறுத்தி அப்புறம் ஓட்ட அங்கங்கே காட்டிலாகா தீமூட்டி பந்தோபஸ்து செய்திருந் தாலும் தூக்கம் வராது. அதனால் பஜனை செய்தால் இராப் பொழுது சீக்கிரம் கழியும் என்று பட்டது. அதற்கும் சம்மதித்தோம். ஆனால் அவர் வருமுன் எங்கள் இரண்டு விரிப்பையும் விரித்து அந்த மட்டில் இடத்தை பொத்திக் கொண்டோம்.

பஜனைக்காரர் ஜாலரா சதங்கைகளை எடுத்து வந்தார். உடனே கூட்டம் சேர்ந்துவிட்டது. அவர் ஒரு தெலுங்கர். தெலுங்கிலே ஸ்ரீதியாகையர் செய்ததாகச் சொல்லும் டோலோத்ஸவ பாடல்களை ஆரம்பித்தார். அது தசரதன் புத்ர காமேஷ்டியிலிருந்து ராமஜனனம், விச்வாமித்ர யாக சம்ரக்ஷணம், சீதா கலியாணம், பட்டாபிஷேகம்வரை நீண்டது. அவருக்கு சாரீர சம்பத் குறைவு. ஜெயம்மாவுக்கு துளி அபசுவரம்கூட தாங்கமுடியாத ஞானம். ஒன்பதரைக்குள்ளாகவே ஜெயம்மாவுக்கு அலுப்பு தட்டிவிட்டது. என்னிடம் கண்ணைக் காட்டினார் அதை அறிந்து நான் பாகவதரிடம் 'அய்யா! அந்த அம்மாள் இது போன்ற யாத்திரைகள், நடை, ஸ்ஞுதிகளுக்குப் பழக்கப் பட்டவரில்லை, அலுத்துப் போய்விட்டார். படுக்க வேணும் இவ்வெட்ட வெளியில் படுத்துகொள்வதும் அபராதமாகாது என்று ஒருவிதமாகச் சொல்லி ஜயம்மாவைப் படுக்கவைத்தேன். அது குறிப்பறிந்து அவர் நிறுத்திக்கொள்வார் என்று பார்த்தோம்.

அது நடக்கவில்லை. நானும் மன்னிப்பு கேட்டுக்கொண்டு படுத்துவிட்டேன். சற்று கண்ணயர்ந்ததும் என்னை ஒருவர் தட்டி எழுப்பினார்; என்னவென்றால் இதுவரை டோலோத் சவம் செய்தது போதாமல் சலங்கை கட்டிக்கொண்டு ராதா கிருஷ்ண நடனம் ஆரம்பித்து விட்டார் பாகவதர். இது ஏதடா சங்கடம் என்று நினைக்கையிலேயே சங்கட ஹரண பகவான் ஒரு மழையை ஏவிவிட்டார். அது பாகவதர் உபத்திர வத்திலிருந்து விடுதலை கொடுத்தது; ஆனால் விடிந்து செய்ய

வேண்டிய ஸ்னானத்தை அப்பொழுதே தொடங்கிவிட்டது; ஒதுங்க இடமேது?

சரி படுக்கையைசுருட்டினோம்; சுருட்டிமுடிந்தால்மழைநிற்கும்; திரும்ப விரித்தால் தூறல் தொடங்கும். இப்படி இரவு 2-15 வரை எங்களுக்கும் மழைக்கும் போட்டி நடந்தது;எங்களுக்கோ அலுப்பு தாங்கவில்லை; கையில் இரண்டு குடைகள் இருந்தன; ஆளுக்கு ஒரு குடையை தலைக்கு மறைவாக வைத்துக்கொண்டு உடம்பு நனைந்தாலும் போகட்டும் என்று படுத்துவிட்டோம்; விடியும் பொழுதே முழித்துக்கொண்டோம். உடனே பல்விலக்கி ஸ்னானத்திற்கு அருவி ஸ்னான கட்டடங்களுக்கு ஒரு மைல் வரை நடந்துபோய் ஸ்னானம் செய்து ஓடக் கரைக்குத் திரும்பினால் கல்லிடைக் குறிச்சி மகான் காப்பி சாப்பிட வாருங்கள், சாப்பிடாமல் ஊர் போகலாமோ என்று உபசரித்தார்; அது சமயம் குடிக்க ஏதேனும் சூடாகவேணும் போலும் இருந்தது. காபி வாசனை ஏற்றிய சூடான சர்க்கரை சேர்ந்த பான தீர்த்தமாக இருந்தாலும் அந்த வேளைக்கு சுண்டக் காய்ச்சிய பசும்பாலில் ஒண்ணும் கிளாஸ் ஸ்பெஷல் காப்பி எஸ்ஸென்ஸுக்கு சமானமாக எங்களுக்கு ருசித்தது; அவரிடம் ஒருவிதமாக சாப்பாட்டிற்கு தப்பித்துக்கொண்டு முதல் ஓடத்தில் இக்கரை வந்தோம்; கீழ் அணையில் எங்களுக்குத் தெரிந்த சூபர்வைவஸர் எங்களைப் பார்த்துவிட்டு வீட்டிற்கு வரும்படி அழைத்தார் அவர் வீட்டில் உண்மையான கெட்டி காப்பி கொடுத்து உபசரித்தார்கள்; அது சமயம் காலை ஒன்பது மணி. அவர்களும் சாப்பாட்டுக்கு இருக்கும்படி உபசரித்தார்கள்; நான் மட்டுமானால் தங்கியிருப்பேன். ஜெயம்மாவோ இந்த இடங்களைப் பார்த்ததில்லை. அவருக்கு பாபநாசத்திலுள்ள கல்யாண கோல சிவனையும் அம்மனையும் காட்டவேணும் துறையில் மீன்களை பக்கத்திலுள்ள மற்ற காட்சிகளைக் காட்டிக்கொண்டு இரவு குற்றாலம் செல்ல வேண்டும். அதனால் இங்கும் தட்டிக் கழித்துவிட்டு 9-15க்கு பாபநாசம் சேர்ந்தோம். பஸ் நிற்குமிடத்தில் ஒரு ஓட்டல் இருந்தது. அங்கு நாங்கள் கொண்டு போன விரிப்பு உடுப்பு தீர்த்த பாத்திரங்களை வைத்தோம்; அப்போது ஹோட்டல் நடத்துவோர், ஏன் இங்கு வைத்தீர்கள்? என்றார். இல்லை, உங்கள் ஹோட்டலில்தான் சாப்பிடப் போகிறோம்; இவைகள் இங்கிருக்கட்டும். நாங்கள் கோவில், மீன்கள் பார்த்துவிட்டு வருகிறோம்; எங்களிருவர் சாப்பாட்டிற்கும் இந்தாருங்கள் ஒரு ரூபாய் என்று எடுத்துக் கொடுத்தேன். ரூபாயைக் கண்டதும் நாங்கள் நிச்சயமாய் சாப்பிட வருவோம், சாமான் மட்டும் வைக்க சால்ஜாப்பு சொல்லவில்லை என்று அறிந்து சுமுகமானார்.

பாபநாசத்தில் சுற்றிச்சுற்றி வந்தாலும் ஒரு மணி அவகாசத்திற்கு மேல் பார்க்க ஒன்றும் இல்லை. அதனால் 10-15 திரும்பி வந்து சமையல் ஆயிற்றா என்று கேட்டோம். ஏனெனில் மற்றவர் ஆடி அமாவாசை ஸ்னான தர்ப்பணங்களை முடித்து விட்டு அப்போது நான் காட்டு இட்லியை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்; ஹோட்டல்காரர், ஓ சமையல் ஆய்விட்டதே! நீங்களே பாருங்கோ. சுடச்சுட, இதோ கறி, கூட்டு, சாம்பார், ரஸம் என்று காட்டினார். வாஸ்தவமாகவே எல்லாம் கொதி அடங்காத நிலையில் அடுப்பை விட்டு இறக்கினதும் இறக்காததுமாக இருந்தன.

நாங்கள் குற்றாலம் திரும்ப வேண்டியவர்களானதால் சாப்பிட உட்கார்ந்தோம். எல்லாம் வகையாய் பரிமாறி அன்னம் படைத்தார்கள். கை வைத்தால் தண் என்றிருந்தது. ‘என்ன ஐயா! இது? என்றோம். என்ன செய்வதம்மா! சாதம் மட்டும் மௌளத்தான் சமைப்போம் என்றும் பாக்கிப்பேர் பன்னிரண்டு மணிக்கு மேல் வருவார்கள் என்றும் பரிமாறியிருக்கும் அன்னம் முன் இரவு சமைத்ததானாலும் கெட்டுப் போகவில்லை என்றும் பல்லைக் காட்டினார். போகட்டும், சாதம் சூடாய் உபகரணங்களும் கொதிக்க கொதிக்க இருந்தால் அவசரததுக்கு சாப்பிட்டு பஸ்ஸில் போவது சிரமம் தானே என்று திருப்தி படுத்திக்கொண்டு சாப்பிட்டோம். நாங்கள் அமாவாசை யன்று பழையமுதை அதிகம் வம்பு செய்யாமல் சாப்பிட்டதில் அவருக்கு ஏற்பட்ட மதிப்பில் எங்களுக்கு கட்டித் தயிரும் ஸ்பெஷலாக பால் சேர்த்து பாயஸமும் பரிமாறி உபசரித்தார். இப்படியாக அடுத்த பஸ்ஸில் ஏறி இரவே திருக்குற்றாலம் வந்தோம். அன்று அங்கும் ஆடி அமாவாசைக்கு விசேஷமும், லக்ஷதீபமும் நடந்தது. அதையும் அனுபவிக்கக் கொடுத்து வைத்திருந்தோம்.

காந்தி மகான் சொல்கிறபடி மனிதர்களை ஒடுக்கி, அடிமைப் படுத்தி பட்டினி போடும் இயந்திர சாதனங்கள் கூடாதுதான். ஆனால் பத்து நிமிஷங்களுக்கு ஒருமுறை பறக்கும் பஸ்களும், ஆழ ஏரியில் அதிசீக்கிரம் செல்லும ஆவி ஓடங்களும் இருப்பதினால் தானே காலையில் பாணதீர்த்த ஸ்நானமும், கல்யாணகோல பாபனாச பகல் தரிசனமும், இரவு குற்றாலநாதர் கோவில் தீபாலங் காரமும் கிடைத்தது.

நம் முன்னோர்கள் சரித்திரங்களை நாட்டுப் பாட்டாக பரம்பரையாய் சொல்லி வைத்தார்கள். பூகோள விஷயம் தற்காலம் பள்ளிகளில் சுற்றுப்பிரயாணம், உல்லாஸப் பிரயாணமாக நடத்துபவைகளை நம் முன்னோர் மதத்தோடு கடவுள் வழிபாட்டோடு சேர்த்து இணைத்தார்கள்.

ஜன்மத்தில் ஒருதரமாவது காசி போய் ஸ்நானம் செய்து தீர்த்தமெடுத்து வந்து ஸ்ரீராமநாதனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்றும், தேசத்தை நேரில் அறியவும், பலதரப் பட்ட மனிதருடன் பழகவும் ஏற்பட்ட திட்டமே. மேலும் அந்த இடத்தில் அமாவாசை ஸ்நானம், இந்த இடத்தில் பௌர்ணமி விசேஷம், இன்னொரு இடத்தில் ஏகாதசி, மற்றொரு இடத்தில் ஷஷ்டி இப்படி ஏற்படுத்தினதெல்லாம், எல்லாவறறையும் முதல் கையாக அறிந்து பரமன் மகிமையை அறிந்து ஞானம் வளரத்தான். அபபடி அறிந்ததை இப்படிச் செல்ல காலவசதி பண வசதி தேகநிலை இடங்கொடாமை என்றிருப்பவருடன் பகிர்ந்து கொள்ளவே யாத்திரை சென்று வந்தால் சமாராதனை செய்ய வேண்டும் என்பது என்று நினைக்கிறேன்.

அடுத்த கடிதத்தில் அனந்த பத்மநாபன், ஜனார்த்தனன், சுசீந்திரன், செந்தூர் ஆண்டவன் முதலியவைகளை தரிசித்ததை எழுதுகிறேன.

இப்படிக்கு அடுத்த யாத்திரைக்காவது சாக்குச் சொல்லாமல் கூட வருவாய் என்று ஆவலாயிருக்கும். —பார்வதி.

ப்ரதிபிம்பம்

ஸ்ரீமதி வை. மு பத்மினி ஸ்ரீநிவாஸன்.

ரத்னசாமியினுடைய வாழ்க்கையின் விசித்திரம் ஒருவருக்கும் புரியாத புதிராகவே இருப்பதால் அவனைப் பார்க்கும் எல்லோரும் சில விநாடிகளாவது அவனைப்பற்றி யோசிக்காமலிருப்பதில்லை. ஒருவருக்கொருவர் விவரம் புரியாத பூடகமான நிலைமையில் ஏதேதோ பேசிக் கற்பனை செய்துகொண்டு பிறகு அதையும் நம்பாமல் திகைப்பார்களேயன்றி முடிவான அபிப்பிராயம் எதுவுமே ஏற்படவில்லை.

ரத்னசாமி பெரிய பட்டதாரி. பட்டம் பெற்றதோடு பல பதக்கங்களும் வாங்கியுள்ள மேதாவி. அழகு, ஆற்றல், செல்வம், கண்ணியம் முதலிய அம்சங்களும் நிறைந்தவன். பெரிய உத்யோகமும் செய்து மாதம் ஆயிரத்து முன்னூறு ரூபாய் சம்பளம் வாங்குஇருன். பெரிய கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவனாகையால் சுற்றத்தாரின் மதிப்பிற்கும் குறைவில்லை.

பெரிய ஜட்ஜியினுடைய மகளை மணந்திருப்பதால் அந்த விஷயத்திலும் எத்தகைய குறையுமில்லை. ஆனால் என்ன காரணத்தினாலோ அவனுடைய சோகத்தையும், முகத்தில் தாண்டவமாடும் ஏக்கத்தையும் அவனைப் படைத்த பகவானுக்குக்கூடத் தெரியுமோ! தெரியாதோ என்றுகூட நினைத்தார்கள்.

தன் கணவன் வெறும் உம்மணாமூஞ்சி, கலகலப்பற்றவன்; வெறும்யந்திரம்போல்வேலைசெய்பவன என்றுதான் அவன் மனைவியாகிய மாதவி நினைத்திருந்தாள். ஆனால் குடும்பத்திற்கு வந்த சில வருஷங்கள் வரையில்தான் அந்த எண்ணம் அவள் மனத்தில் ஊர்ஜிதமாகியிருந்தது. அதன் பிறகு மெல்ல அந்த எண்ணம் நழுவி பெரிய சந்தேகமும், அவளையறியாத ஒரு குழப்பமும் உண்டாகிவிட்டது.

ரத்னசாமியின் குடும்பத்திலேயே குழந்தைகள் இடையாது. அபூர்வமாக ஒரு குழந்தை ரத்னசாமி பிறந்தது அரச பதவிக்கு இளவரசன் பிறந்துவிட்டது போலவே அவனுடைய குடும்பத்தினர்களும் மற்ற உறவினர்களும், சிநேகிதர்களும் நினைத்துப் பூரித்தார்கள்.

அவனுக்குப்பிறகு ஒரு குழந்தையும் பிறக்கவில்லை. அவனுக்காவது காலாகாலத்தில் நிறைய குழந்தைகள் பிறக்க வேணும் என்கிற பேராசையினால் தினேதினே ப்ரார்த்தனை செய்து எதிர்பார்த்திருந்தார்கள். மாதவி குடும்பத்திற்கு வந்த மூன்றாவது வருஷம் வரையில் கர்ப்பவதியாகாமலிருந்ததால் குடும்பத்தினர் மகத்தான கவலையை அடைந்துபலவித

தொடர் கதை

183195

ப்ரார்த்தனைகளைச்செய்தும் விரதாதிகளை அனுஷ்டிக்கச்சொல்லியும் செய்தார்கள். மூன்றுவது வருஷம் மாதவிகர்ப்பவதியான உடனே. ஆதியில் ரத்னசாமி பிறந்த சந்தோஷத்தினுல் எப்படிப் பூரித்தார்களோ! அதைவிட ஆயிரம் மடங்காக எல்லோரும் ஆனந்தத்தையடைந்து மாதவியை ஒரு அரசியைப்போல பாவித்து நடத்தத் தொடங்கினுர்கள்.

மாதவிக்கும் உள்ளூறப் பெருமைதான். எனினும் இத்தனை ஜனங்களுடைய கட்டுமீறிய ஆனந்தத்தையும், பரிவும் கனிவும் கொண்ட உபசாரத்தையும் கண்டு பூரிக்கும்போது தன் கணவன் மட்டும் இப்போதும் தன்னிடம் தனித்த அன்பைக் காட்டாமல் இப்படி இருக்கிறுனே என்கிற ஏக்கம் சிறு விதைபோல் இதயத்தில் விழுந்துவிட்ட பிறகுதான் அவளுக்குக் கவலை உண்டாகியது. தன்னைப் பிறர் எத்தகைய உயர்வான முறையில் நடத்திப் பாதுகாப்பதெல்லாம் அவளுக்கு த்ருப்தியாகவே இல்லை. பிறக்கப் போகும் குழந்தையின் தகப்பனுராகிய தன் கணவனுக்கு இந்த சந்தோஷத்தில் பூரணபங்கும் எதிர்பார்ப்பும் இருக்க வேண்டியது போக அவர் என்றும் போலவே இப்படி இருப்பதில் ஏதோ ஒரு விபரீத மர்மம் மறைந்துகொண்டுதான் இருக்கவேண்டும். இல்லாவிடில் தப்பித்தவறிகூட ஒரு சந்தோஷத்தைக் கூறவில்லையே—முகபாவத்தில்கூட காட்டவில்லையே! எதனுல் இப்படி இருக்க வேண்டும். ஆதிமுதல் நான் அவரைப்பற்றி விகல்பமாக எதையுமே நினைக்காமல் சுபாவத்திலேயே சிடுமூஞ்சி என்று நினைத்துவிட்டது தவறு என்றல்லவா தெரிகிறது.

ஒரு வேளை என்னை மனப்பூர்வமாக அவர் நேசிக்காமல் பெரியவர்களின் கட்டாயத்திற்காக மணந்திருப்பாரா! அல்லது தற்கால நாகரீகப் பேயின் தாண்டவப்படி சில மைனர்களைப்போல் இவரும் அந்தரங்கமாக வேறு யாரையாவது நேசித்துத் தொடர்பு கொண்டிருப்பாரா! ஒன்றுமே விளங்கவில்லையே! புரியாத புதிராகவன்றோ இருக்கிறது. இதைப்பற்றி எப்படியும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாலொழிய என் மனம் சாந்தியடையாது என்கிற எண்ணங்கள் அலை அலையாக எழுந்து கர்ப்பிணியான அவளுடைய இதயத்தில் வேதனையுண்டாக்கி முகத்தில் ஏக்கத்தின் ரேகைகள் படிந்து கர்ப்பிணிக்குண்டாகக் கூடிய இயற்கை யழகையும் வசீகரத்தையும் குலைக்கச் செய்தது.

முதலில் சில தினங்கள் வரையில் இவளுடைய கரு நோயின் (மசக்கையின்) காரணமாகச் சோர்வும் உறக்கமும் உண்டாகி இருப்பதாக வீட்டிலுள்ளவர்கள் நினைத்தார்கள். 5-வது மாதம் பிறந்ததும் குடும்ப வழக்குப்படி 'மோக்துதைந்தல்' என்கிற சடங்கு செய்வதற்கு மாதவியின் மாமியார் பெரிய திட்டமிட்டு அதற்காக வைரத்தில் தலைக்குத் திருகுபில்லை செய்யவும், உயர்ந்த சரிகைப் பட்டாடை வாங்கவும் ஆரம்பித்தாள்.

தெளிந்த ஜலத்தில் கல்லைப் போட்டுக் கலக்கியதுபோல் இன்பமயமாகத் துள்ளி விளையாடிக்கொண்டிருந்த மாதவியின் இளப இதயத்தில் கணவனைப்பற்றிய சந்தேகங்கள் மலையைப் போல் அழுத்திவிட்டதால் உத்ஸாகமிழந்த நிலைமையில் மொக்கு கூட்டும் கல்யாணத்தைச் செய்துகொள்ள அவளுக்குச் சற்றும்

பிடிக்கவில்லை. தான் கர்ப்பவதியாகி இருப்பதே கணவனுக்குப் பிடிக்கவில்லையா! என்றுகூடத் தோன்றி மனத்தை அலக்கழித்து வருவதால் இதைப்பற்றிக் கேட்டுவிடுவதே சரி என்று தீர்மானித்துக்கொண்டு அன்று கணவனின் வருகைக்காக வெகு நேரம் விழித்திருந்தாள்.

ரத்னசாமி நடுநிசிக்குத்தான் வீட்டிற்கு வந்தானாகையால் பல ஹீனப்பட்டுள்ள நிலைமையில் தன்னையறியாது தூங்கிவிட்ட மாதவிக்கு அன்றும் ஏமாற்றமாகிவிட்டது. மறுதினம் காலையில் வழக்கப்படியே வெளியே சென்றுவிட்ட ரத்னசாமியை மாதவி சந்திக்கவே முடியாது போய்விட்டது.

வை. ழ. கோ. எழுதியுள்ள 'உளுத்த இதயம்' என்கிற மிக்க அத்புதமான நாவலைப் படித்துவிட்டு மாதவியின் சிநேகிதையொருத்தி அன்று வழக்கப்படி மாதவியுடன் பேசுகையில் இக்கதையின் ஸாரத்தையே எடுத்துக் கூறிக் கதையைப்பற்றியே பேசிக்கொண்டிருந்ததானது மாதவியின் உள்ளத்தில் ஏற்கெனவே உள்ள அதிர்ச்சியைத் தூண்டிவிட்டுப் புயலடிப்பதுபோல் செய்துவிட்டதால் அவளுடைய நிலைமை மிகமிக மோசமாகிவிட்டது. உண்மையின் மர்மம் அறியாத சிநேகிதை மசக்கையின் கொடுமையில் கதை கேட்பதுகூட வெறுப்பாக இருக்கிறதுபோலும் என்று எண்ணி வார்த்தையை மாற்றிவிட்டாள்.

இத்தனை நாளும் இருக்கும் வேதனையைவிடப் பதினாயிரம் மடங்காக மாதவியின் இதயத்தில் தாங்க முடியாத சங்கடம் உண்டாகி விட்டதால் படுக்கையோடு படுக்கையாகி விட்டாள். எழுந்திருக்கவே முடியாத நிலைமையில் தவிக்கும் சமயம் மாதவியின் மாமியார் அபாரமான சந்தோஷத்துடன் ஒரு பெட்டி நிறைய உயர்ந்த சரிகைச் சேலைகளைக் கொண்டுவந்து காட்டி... அம்மணீ! மாதவி! இந்தச் சேலைகளில் உனக்கு எதெது மிகவும் பிடிக்கிறதோ அதில் நாலைந்து எடுத்துக்கொள்ளு. இதோ இந்த திருகு பில்லைகளின் மாதிரியில் உனக்குப் பிடித்தமானதைப் பொறுக்கி வைத்துக்கொள் என்று அன்பு ததும்பக் காட்டினாள்.

மாதவியின் மனவேதனையில் இவைகளைப் பார்க்கவும் பிடிக்கவில்லை என்றாலும் தன்மீது இத்தனை அன்பைச் சொரிந்துள்ள மாமியாரின் மனங்கோணாமலும், அவர்களுடைய சந்தோஷத்திற்குப் பங்கம் வராமலும் தான் நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கும் பொறுப்பை உணர்ந்து வேண்டாவெறுப்பாகப் பார்த்துவிட்டு, அம்மா! நீங்கள் எதைத் தேர்ந்தெடுத்தாலும் அது எனக்கு மிக்க சம்மதமே. எனக்குத் தலை சுற்றுகிறதால் பார்க்கக்கூட முடியவில்லை. தயவுசெய்து மன்னித்து விடுங்கள்! என்றாள்.

மங்களம்:—மாதவி! இந்தச் சேலைகள் அத்தனையும் நானும் உன் மாமனாரும் சேர்ந்து எங்களுக்குப் பிடித்ததைத்தான் பொறுக்கிக்கொண்டு வந்தோம். "கர்ப்பிணியின் மனம்போல் வாங்காவிட்டால் காட்டு மிருகமாகப் பிறப்பார்கள்" என்பது பழமொழி. அதோடு அவளுடைய மனங்களிக்கும்படி நடத்தினால்தான் பிறக்கப் போகும் குழந்தை சகலவிதத்திலும் செழுமையாயும் சிறப்பாயும் வளரும். நன்றாக இருக்கும். கர்ப்பிணியின் மனத்தில் கவலையோ! குறையோ! ஏக்கமோ உண்டாகவே கூடாது.

அவைகள் உண்டாகிவிட்டால் குழந்தை நன்றாக வளராமலும், ஏதாவதொரு ஊனமோ குறையோ உண்டாகிவிடும். அதனால் தான் கர்ப்பிணிகளைப் பலவிதத்திலும் சந்தோஷப்படுத்தி அவர்களை உற்சாகப் பதுமைகளாகவே நடத்துவதைப் பெரியவர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். நீ மனப்பூர்வமான சந்தோஷத்துடன் சதா ஆனந்தமாக இருந்தால்தான் நல்லது மாதவி. சில தினங்களாக ஏதோ ஒருமாதிரியாக நீ காணப்படுகிறாய். அதையும் நான் கண்டு பயப்படுகிறேன். உன்னுடைய ஆனந்தத்தின் பூர்ண உருவமே உன் கருவில் வளர்ந்து வரும் நமமுடைய குலத்தின் ஜோதியாகும். ஆகையால் உனக்கு எந்தவிதமான ஆசைகள் இருப்பினும் அதை என்னிடம் அப்படியே எடுத்துச் சொல்லிவிடு. நான் அப்படியே செய்கிறேன் என்று தன்னுடைய அன்பைப் பூராவும் திறந்து காட்டுவதுபோல் ஆர்வத்துடன் பேசுவதைக் கேட்கக் கேட்க மாதவியின் உள்ளத்தில் இன்னும் அதிகரித்த வேதனை புதிது புதிதாக உண்டாகிவிட்டது.

தான் கவலைப்படுவதால் கருவிலுள்ள சிசு அங்கஹீனமாகிவிடுமோ! வளராது நோயாளிப்பிண்டம்போல் நகைப்பிற்கிடமாகிப் பிறந்து விடுமோ! ஒரு குழந்தை பிறப்பது என்றால் அதில் எத்தனை தொல்லைகள்! எத்தனைவிதமான விதிகளைப் பிறர் நியமித்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது உடல் பூராவும் வியர்வை வெள்ளமாகப் பொங்கியது.

தற்சமயம் கவலையைத்தவிர மற்றபடி வேறு எந்தவித உணர்ச்சியும் இல்லாத நிலையில் தன் விதி இன்னும் எத்தனை விபரீத சோதனைக்கு இலக்காக்கிவிடுமோ என்று நினைக்கும்போது தனக்கேன் இந்த கர்ப்பம் உண்டாகியது என்றுகூடத் தோன்றிவிட்டது. எப்படியோ சமாளித்துக்கொண்டு தனக்குப் பிடித்த இரண்டு மூன்று சேலைகளையும் ஒரு வைர பில்லையையும் பொறுக்கும்போது ரத்னசாமி தற்செயலாக அங்கு வந்தான்.

மங்களம்மாள் மிக்க மகிழ்ச்சியுடன் வாடாப்பா! வா... அடுத்த வெள்ளிக்கிழமையன்று மாதவிக்கு மொக்குசூட்டும் கல்யாணத்தை மிகச் சிறப்பாக நடத்தத் தீர்மானித்து அப்பாவும் நானும் முஸ்தீபுகள் போட்டுவிட்டோம். அதற்காக சேலைகள், ஜடைபில்லைகள் கொண்டு வந்திருக்கிறேன். உனக்குப் பிடித்ததை நீ பொறுக்கி எடுத்து அவளுக்குக் கொடு. அவளுடைய மனது சந்தோஷ மலராக இருந்தால்தான் பிறக்கப் போகும் குழந்தை ஆனந்தப்பதுமையாகவும் அழகு வெள்ளமாகவும் இருக்கும். இந்தா! இவைகளைப் பாரு என்று வெகு குதூகலமாகக் கூறினாள்.

ரத்னசாமி எத்தகைய சந்தோஷத்தையும் அடையவில்லை. அவனைக் கண்ட மாதவி ஒரு புத்துணர்ச்சியை அடைந்தவளாய், நல்ல வேளை! சமயத்திற்கு வந்தீர்கள். இந்த சிகப்புக் கலர் புடவை நன்றாக இருக்கிறதா பாருங்கள். இல்லாவிட்டால் இந்த நீலக்கொட்டடி தேவலையா... என்று ஆவலே வடிவமாக அவன் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

மங்களம்:—உனக்கு ரத்னசாமி என்று பெயர் வைத்ததை மாற்றி மவுனசாமி என்று வைத்துவிடலாம். ஏனோ இந்த மவுனமும் சிடுமூஞ்சியும் உண்டாகியதோ தெரியவில்லை. கேட்பதற்குப்

கீதாவின் பாசம்

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.

மாலை நாலு மணி சமயம். "டணர், டணர்" என்று பள்ளிக்கூடத்து மணி அடிக்கவே, குழந்தைகள் ஆனந்த கோலாஹலத்துடன் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேறினர்கள். பள்ளிக்கூட வாசற் கதவருகில் ஒரே கூட்டம்.

போதாக்குறைக்கு அன்று வெள்ளிக்கிழமை; சரஸ்வதி பூஜை. சிறுமிகளின் ஆனந்தத்தைக் கேட்கவும் வேண்டுமா? (அந்தப் பள்ளிக்கூடத்தில் வெள்ளிதோறும் சரஸ்வதி தேவி படத்துக்குப் பூஜை செய்வது வழக்கம்.) ஒவ்வொருவரின் கையிலும் தேவியின் பிரஸாதமன வாழைப்பழம். சில சிறுமிகள் பள்ளிக்கூட வாயிலைத் தாண்டுவதற்குள்ளாகவே சாப்பிட்டு முடித்துவிட்டிருந்தார்கள். கையில் வெறும் தோல்தான்; ஆனல் கீதாவின் கையில் மாத்திரம் முழுப்பழமும் பச்சென்று காட்சியளித்தது, அவள் அதை ஆர்வத்துடன் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டே தன் கூட்டாளிகளிடம் "உங்களைப்போல் நான் இதைத் தின்ன மாட்டேன். எங்கப் பாட்டிக்குக் கொடுக்சப் போகிறேன்" என்ருள். அவளுடைய மழலை மொழிகளில் ஒருவிதத் தன்னலமற்ற ஆழ்ந்த அன்பு தொனித்தது. அச்சமயம், அவள் முகத்தைப் பார்க்க வேண்டுமே! மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தது. "கனகம், இதை எங்க பாட்டிக்குக் கொடுத்தால் எவ்வளவு சந்தோஷப்படுவாளோ! அவளுக்குப் பச்சை வாழைப்பழம் என்ருல் ரொம்பப் பிடிக்கும்."

"போடி, பைத்தியம். அவளுக்கு வீட்டில் இல்லையா என்ன? சாப்பிடுடி சும்மா, மகா பெரிய ஆஸ்தி, வீட்டுக்குக் கொண்டு போகிருளாம், வீட்டுக்கு! என்று அலக்ஷியமாக அழகு காட்டினுள் கனகம்.

என்றைக்கும் இல்லாத புது உத்ஸாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்த கீதாவின் முகம்,

---

பதில் சொல்லப்பா! பேசாமல் போய்விடாதே. அவளுடைய உத்ஸாகம் குறைந்துவிடுமாயின் நமது செல்வத்தின் வளர்ச்சியே குன்றிவிடும். செல்வமென்ருல் பணத்தைச் சொல்லவில்லை. பிறக்கப் போகும் அருமைச் செல்வனைப்பற்றித்தான் பேசுகிறேன். ரத்னம்! உனக்குப் பிடித்ததைச் சொல்லப்பா! என்று தாயின் அன்பைக் காட்டித் தந்தையின் அன்பை நினைவூட்டினுள்.

ரத்னசாமி புடவைகளின் விலைப்பட்டியலைப் பார்த்து உதட்டைப் பிதுக்கியவாறு 334 அடேயப்பா! இத்தனை விலையைப் போட்டு ஒரு புடவை வாங்கிப் பெட்டியில் வைத்துப் பூஜை செய்வதில் என்ன லாபமோ! தெரியவில்லை. இத்தனை விலையுயர்ந்த புடவை வாங்கினுல்தான் உசத்தியா! 15 ரூபாயில் ஒரு புதிய உடை வாங்கிவிட்டு மிச்சத்தை அன்ருடம் கஞ்சிக்கின்றி பஞ்சாய்ப் பறக்கும் ஏழைகளுக்கு உடுக்க உடையாயும், படுக்கப் பாயாயும் வாங்கிக் கொடுத்தால் உன் செல்வம் சிறப்பாக வளராது தேய்ந்து விடுமோ! என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

இச்செய்கை மாதவிக்குப் பின்னும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

(தொடரும்)

கனகாவின் வார்த்தையைக் கேட்டோ, அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ வேதனையுடன் சுருங்கிற்று.

“இல்லையடி கனகம். எங்கள் வீட்டுப்பேச்சு உன்னிடம் சொல்வானேன். அது என்தானோ, பாட்டிக்கு எங்கம்மா இவ்வளவு நல்ல பழத்தைக் கொடுத்து ஒருநாளும் நான் பார்த்ததேயில்லை. தோல் கருத்து சுருங்கி, அழுகிப்போன பழத்தைத்தான் கொடுப்பாள். “எம்மா பாவம்! பாட்டிக்கும் நல்ல பழத்தைக் கொடும்மா” என்றால், “போடி, அதிகப் பிரசங்கி. உன் பாட்டிக்குப் பல் இல்லை. இப்படி இருந்தால்தான் சாப்பிட மெதுவாக இருக்கும். உன்னாட்டம் பாட்டி நிறத்தைப் பார்த்து பொறுக்க மாட்டார்” என்கிறாள் எங்கம்மாள். எனக்கு ஏனோ பாட்டியின் வாழைப்பழத்தைக் கண்டாலே வயிற்றைப் பிரட்டுகிறது. என்றைக்காவது அவருக்கு ஒரு நல்ல பழமாகக் கொடுக்க மாட்டேனா என்றிருந்த எனக்கு, இன்று இந்த பொக்கிஷம் கிடைத்ததுடி. இதைக் கொடுத்தால் பாட்டி எவ்வளவு சந்தோஷப்படுவார்! பாருடி கனகம். எங்கள் பாட்டிக்கு நடக்கக்கூட முடிகிறதில்லை. கோலை ஊன்றிண்டு நடக்கிறார் பாவம். நான் வீட்டில் இருக்கச்சே, நான்தான் ஏதாவது ஒத்தாசை செய்வேன். இல்லாவிட்டால் கேட்பாரே இல்லை” என்று துயரம் மென்னியைப் பிடித்தழுத்த சொன்னாள் சிறுமி கீதா.

கனகம் “உங்கம்மா?”

கீதா “அம்மாவா? அவளுக்கு ஏது ஒழிவு? அக்கா, கிட்டு... இவாளுக்கெல்லாம் பாட்டியைக் கண்டால் தமாஷ்தான். நாழியாகி விட்டது. நான் சீக்கிரம் போக வேண்டும்மா. பாட்டி என்னை வழி பார்த்துண்டிருப்பா” என்று சரசரவென்று நடக்கவாரம்பித்தாள்.

“பாவம், பாட்டி ஏன் இவ்வளவு கஷ்டப்படுகின்றார்? ராம நாம ஜபம் செய்தால் கஷ்டம் எல்லாம் பரிகாரம் ஆகும் என்பார்களே. நம்ம பாட்டி எப்பொழுது பார்த்தாலும் ராமநாம ஜபம் செய்துண்டே இருக்காரே. அவருக்கு ஏன் நிறைய பலம் வந்து நம்மைப்போல் நன்றாக நடமாடப்படாது? அம்மா ஏன் அவருக்குத் திருப்தியாகப் பரிமாறி, உபசாரம் செய்யப்படாது?” என்றெல்லாம் அந்த எட்டு வயது பாலகியின் பூ உள்ளத்திலிருந்து கனிகரம் என்ற ஓடை பொங்கி வழிந்தோடிற்று. ஆனால், அந்த வீட்டில் அவளைத் தவிர வேறு யாரும் பாட்டிக்காகத் துயரப்படுகிறவர்களைக் காணோம்.

பாட்டியின் நாட்டுப்பெண் ஜானகி நல்லவள்தான், இல்லை என்க்வில்லை. ஆனால், நாலைந்து குழந்தைகளின் தாயார். மேலும் பண்டங்களின் விலைவாசி எல்லைமீறி உயர்ந்திருக்கும் காலம். என்ன சமைத்தாலும் சரி, கஷ்டப்பட்டு உழைத்து வரும் கணவனுக்கும், செல்வக் குழந்தைகளுக்கும் பங்கிட்டு விடுவாள்...மாமியார் அவள் கணக்கில் இல்லை (வரமாட்டாள்). பாழும் மறதியோ, என்னவோ!!...... இல்லை... இவ்வளவு நெய்யும், சர்க்கரையும் கொட்டி செய்த பக்ஷணத்தை அந்தக் கிழவிக்குக்! கொடுக்காவிட்டால் என்ன? வாழ்வில் சகல சுகபோகங்களையும் கண்டு, அனுபவித்து, அலுத்துவிட்டிருக்கும் கிழவிக்கு

ஒரு இத்தனை உப்புமாவைக் கிண்டிப்போட்டால், கிடக்குது. நெய் விட்ட அல்வாவும், ஜிலேபியும், பொங்கலும்...... அம்மம்மா, இந்த விலைவாசி நாளில் இதெல்லாம் அவளுக்கு எதற்கு?'' என்ற அசட்டையும் இருக்கலாம்!

ஆகக்கூடி பாவம், நாலு சுவர்களுக்கு நடுவில், திராணனின்றி கைதியைப்போல் காலங் கழித்து வரும் அந்த ஆத்மாவுக்கும் எது வேண்டி இருக்காவிட்டாலும் சாப்பிட வேண்டும் என்ற நாக்கு ருசி உண்டு என்ற அறிவு ஜானகிக்குக் கிடையாதே. சமை யல்கட்டிலிருந்து கமகமவென்று ஏலக்காய், குங்குமப்பூ, பச்சை கற்பூரம், நெய் கலந்த வாசனை வந்தால், பாட்டி நாக்கை நொட்டை போட்டுண்டு உட்கார்ந்திருப்பாள். அதை சாப்பிடும் புண்ணியம் தான் பாட்டிக்குக் கிடையாதே!

உடல் ஒடுங்கி, உள்ளம் சோர்ந்து, காலும் சுவாதீனமின்றி, ஓடியாடி காரியம் செய்ய திராணன் இல்லாமல் போனதினமே, அவள் இந்த ஆசையை எல்லாம்விட்டு ஒழித்திருக்க வேண்டும். ஆனால், பலம் ஒடுங்கிவிட்டாலும், நாக்கு ருசி ஒடுங்கி மறந்துப் போகவில்லையே. வயிற்றுப்பசி இன்னும் அதிகரித்திருக்கே, அவள் என்ன செய்வாள்...பாவம். கறவைப் பசுவுக்குப் பச்சைப் புல், பால் வற்றின பசுவுக்கு வைக்கோலும் அபரூபம்தான்! இந்த அநியாயத்தைப் பாட்டி அறியவில்லைபோலும்!

இரவு பலகாரம் பரிமாற வந்த நாட்டுப்பெண்ணை ''இரண்டாந் தரம் டிபன் என்ன ஜானகி?'' என்று தயங்கித் தயங்கிக் கேட்டாள் பாட்டி.

''ஜாங்கிரி பண்ணி இருந்தேன்.''

''எங்கே, எனக்கு அரை வில்லை கொண்டு வாயேன். ஜாங் கிரியின் ருசி பார்த்து எவ்வளவோ நாளாச்சு!!''

''இந்தக் கஷ்ட காலத்தில் யார் நூறு நூறாகப்பண்ணி குவிச் சிருக்கா? கிட்டு ரொம்பத் தொந்திரவு செய்தான். அரை ஆழாக்கு உளுத்தம்பருப்பை நனையப்போட்டுப் பண்ணினேன், அவ்வளவு தான். குழந்தைகளுக்கே தலா இரண்டு காணவில்லை. உங்களுக்கு எங்கிருந்து கொண்டு வரட்டும்?'' என்று வெடுக்கென்று பதில் அளித்துவிட்டுப் போய்விட்டாள் நாட்டுப்பெண் ஜானகி.

ஆனால், சிறுமி கீதா தன் பங்குக்கு வந்த பக்ஷணங்களில் (விளையாட்டு நினைவு இன்றி பாட்டியின் நினைவு வந்தபொழுது), பாட்டிக்கும் கொஞ்சம் கொண்டுவந்து கொடுத்து, பாட்டியின் நாக்கு சபலத்தைத் தீர்ப்பாள்.

இதையெல்லாம் ஜானகியின் கணவர் கண்டாரா? தன் மனைவியும் சாவித்திரி, அநசூயை, சீதை......இவர்களைப்போல் பவித்திரப்பெண் என்று எண்ணி இருந்தார். ஆபீஸ் வேலை யுண்டு, அவர் உண்டு. வீடு திரும்பினாலும் ஸ்நானம், சாப்பாடு, தூக்கம்......இந்த வேலைகளைத் தவிர மற்ற சமயத்திலும் ஆபீஸ் ரூமில் (Files) பைல்கள் குவியலுடன் போராட்டம் நடத்துவார். உள்ளே வரச்சே, போரச்சே ''அம்மா, என்ன செய்தி?''...என்றது போன்ற இரண்டொரு வார்த்தைகள் பரிமாறிக்கொள்வதுடன சரி.

ஐயரின் மூத்த குமாரன் சங்கரனுக்கு மாத்திரம் தன் தாயார் பாட்டியைப் பார்த்துக்கொள்ளும்வகை கொஞ்சமும் பிடிக்க வில்லை. அவன் பிறந்த நாளிலிருந்து அம்மாவின் மடியிலும், பாட்டியின் மடியிலும் சமபங்கு விளையாடி வளர்ந்தவன் என்ருல் அவனுக்கு அம்மாவைப்போலவே பாட்டியிடமும் அன்புண்டு. அவன், மைசூர் மெடிகல் காலேஜில் படித்துக்கொண்டிருந்தான். சென்னைக்கு வந்து போகும்பொழுதெல்லாம் பாட்டிக்குக் குடகு ஆரஞ்சுப்பழம் என்ருல் பிரியம் என்று ஒரு கூடை நிறைய வாங்கி வருவான். ஆனல், அவைகளில் ஒரு பழமாவது பாட்டியின் கைக்குப் போகாததை அவன் இரண்டொரு தடவை கவனித்து விட்டான். பிறகு, ஊரிலிருந்து வந்ததுமே, தானே கூடையைத் திறந்து, பத்துப் பழங்களை எடுத்துக்கொண்டு போய், பாட்டியின் அறையில் உள்ள அலமாரியில் வைத்துவிடுவான். இந்தண்டை தாயாருக்கும் மைந்தனுக்கும் வாக்குவாதம் நடக்கும்.

ஜானகி "என்னடா இது அதிசயமாகத்தான் இருக்கு! என்னிடம் உனக்கு இத்தனை அவநம்பிக்கையா? உங்கள் பாட்டிக்குக் கொடுக்காமே நானே அவ்வளவையும் தின்று தீர்த்துவிடுகிறேன் என்று எண்ணிக்கொண்டிருக்கிருயா? என்னவோ பாவம், இத்தனை விலையைக் கொடுத்து, வாங்கி வந்திருக்கிருயே. வளரும் குழந்தைகள் சாப்பிடட்டுமே. இன்றைக்கோ நாளைக்கோ கண் மூட இருக்கும் கிழவிக்கு இந்த வைபவம் எல்லாம் எதற்குடா?"

மகன் "சரீம்மா, உன் பேச்சோ, நீயோ, பாவம்! பாட்டிக்குக் குடகு ஆரஞ்சுனு ரொம்பப் பிரியம் என்று உனக்குத் தெரியாதா என்ன? நாளைக்கு என் பெண்டாட்டி வந்து உனக்கு இதேபோல் பணிவிடை செய்யப் போகிருள் இரு!" என்று சுடச்சுட பதில் கொடுத்துவிட்டான் சங்கர். ஜானகி, தன் பிள்ளை அச்சான்னியம் போல் சொல்லக்கூடாததை எல்லாம் சொல்லிவிட்டான் என்று ஓவென்று அழ ஆரம்பித்துவிட்டாள். அன்றிலிருந்து சங்கர் சென்னைக்கு வருவதே அபரூபமாகிவிட்டது. வந்தால், அவனல் பாட்டிக்குப் பழம் கொண்டு வராமல் இருக்க முடியாது. கொண்டு வந்தாலோ, தாயாரின் தொந்திரவு. இந்த இம்சைக்குத்தான் அவன் சென்னைக்கு வருவதே குதிரைக்கொம்பாகிவிட்டது.

தற்சமயம், குழந்தை கீதாதான் பாட்டிக்கு ஊன்றுகோலாக இருந்தாள். அம்மா திட்டினலும், கிட்டு பரிகாசம் செய்தாலும், தமக்கை மிரட்டினலும்...யார் என்ன சொன்னபோதிலும், அவள் தன் பாட்டிக்குத் தன் கையாலான ஒத்தாசையைச் செய்யத் தவற மாட்டாள். பாட்டிக்குக் காலையில் பல் தேய்த்துக்கொள்வதற்கு சொம்பில் வெந்நீர் கொண்டுவந்து வைப்பாள். பாட்டி சாப்பிட்ட பின்னர் இலையை எடுத்து, எச்சில் சுத்தம் செய்வாள். பாட்டி படுத்துக்கொள்வதற்குப் பாய் விரித்துப் போட்டு, தலையணையைக் கொண்டுவந்து வைப்பாள். பாட்டிக்கு முறுக்கு பொடி செய்துகொடுப்பது முதற்கொண்டு கீதாதான் செய்வாள்.

அந்தச் சிறுமி தினந்தோறும் சுவாமிக்கு நமஸ்காரம் செய்யும் பொழுது "சுவாமீ, பகவானே, எங்கள் பாட்டிக்குச் சீக்கிரம் நிறைய பலம் வரும்படி செய்யப்பா. பாட்டிக்கு ருசிருசியாக, நிறைய பக்ஷணம் செய்துகொடுக்கும்படி அம்மாவைத் தூண்டு ஸ்வாமி......" என்றெல்லாம் வேண்டிக்கொள்வாள்.

காவிதாசர் கனவு

8. உமாப்ரஸாதம்—குமாரஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

உடனே பார்வதி தன் தோழியை நோக்க, அந்தத் தோழி அவரை நோக்கி "இவள் இந்திரன் முதலான தேவர்களுக்கும் ஈசனுனவரும் மன்மதனேமே எரித்ததால் அழகால் வசப்படுத்தக் கூடாதவருமான பரமேச்வரனைக் கணவனுக அடையவிரும்புகின்ருள். அவருடைய சினத்தைக் கண்டு நடுங்கித் திரும்பிய மன்மதபாணம் இவளுடைய மனதில் புகுந்து தைத்து விட்டது. அது முதல் சிவத்தியானமாகவே இருக்கின்ருள். கின்னரிகள் சிவகீதம் பாடும்பொழுது இவள் கண்ணீர் விடுவதால் அவர்களேயும் கூட அழச் செய்கிருள். இரவுகளில் கனவிலும் "நீலகண்டரே! எங்கே போகிறீர்" என்று கூவி திடீரென்று விழித்துக்கொண்டு யாரையோ தழுவக் கைகளே நீட்டுகிருள். இவள் வளர்த்த மரங்கள்கூடப் பூத்துக் கனிகளுடன் விளங்குகின்றன. ஆனல் இவளுடைய ஆசை மரமோ அரும்பக்கூட

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

கீதா வீட்டினுள் வந்தவள், புத்தகப் பையைக் கூடத்து ஜன்னலில் வைத்துவிட்டு "பாட்டி" என்று கூவி அழைத்த வண்ணம் பாட்டியின் அறையை நோக்கி ஓடிவந்தாள். கதவருகில் நின்றிருந்த அவளுடைய தமக்கை கமலா "பாட்டிக்கு என்னடீ" என்று கேட்டவள், அவளேத் தடுத்து நிறுத்தினுள். "அக்கா, இதோ, எங்கள் பள்ளிக்கூடத்து சரஸ்வதி பூஜையின் பிரசாதம், பாட்டிக்கு என்று கொண்டு வந்தேன்!" என்று சந்தோஷத்துடன் பழத்தைக் காண்பித்தாள்.

"பாட்டிக்காம் பாட்டிக்கு! இங்கே கொடுடீ" என்று கமலா அந்தப் பழத்தைப் பிடுங்கி உறித்து, தன் இடுப்பில் இருந்த குழந்தைக்குப் பாதிப் பழத்தைக் கொடுத்துவிட்டு, பாக்கியைத் தன் வாயில் போட்டுக்கொண்டாள். அந்தோ! கீதாவின் இன்பக் கனவு சிதறிவிட்டது. துயரம் பொங்கிவர, அருகில் கிடந்த பெஞ்சின்மீது தடால் என்று குப்புற விழுந்தாள். தேம்பித்தேம்பி அழுவதைவிட அவளால் வேறென்ன செய்யமுடியும்?

பாட்டி அறையிலிருந்தபடியே "கமலா, குழந்தை ஏண்டீ அழருள்? பள்ளிக்கூடத்திலிருந்து வரச்சே எங்கேயாவது விழுந்து விட்டாளா என்ன? காயம்பட்டிருக்கோ என்னவோ, போய்ப் பாரேன் சித்தே" என்று பகர்ந்தாள். அவள் பேச்சுக்கு யாரும் செவி சாய்க்கவில்லை, கீதாவைச் சமாதானம் செய்யவும் யாரும் வரக்காணேம்!

வில்லை''. என்று கூறினாள். அவர் "பார்வதி! இது உண்மை தானா?'' அல்லது வேடிக்கைப் பேச்சா?'' என்றார். பார்வதி "உண்மையே! ஆசைக்கு அளவுண்டா?'' என்று மறுமொழி கூறினாள்.

உடனே அவர் நகைத்துப் பின்வருமாறு கூறினார்: "இது என்ன ஆச்சரியம்! மகேசுவரனுக்கு மங்களமற்ற வழிகளில் ருசி இருப்பதால் உன் விருப்பம் போற்றக்கூடியதன்று. அரவத்தை அணியாகப் பூண்ட அவரை நீ மணந்து அவர் உன் கையைப் பிடித்தால் அதை நீ எப்படி பொறுக்க முடியும்? உன் பட்டு ஆடைக்கும் அவருடைய உதிரம் சொட்டும் யானைத் தோலுடைக்கும் பொருத்தம் இருக்குமா? பூக்களின் மேல் நடக்கும் உன் கால்கள் சுடுகாட்டில் நடக்கலாமா? சந்தனக் குழம்பைப் பூசும் உன் தனங்களில் சுடலைப் பொடியைப் பூசலாமா? யானையின் மேல் சிங்காரமாக கம்பீரமாக ஒய்யாரமாகச் செல்லும் இராஜகுமாரியான நீ கிழமாட்டின் மேல் ஏறிச்சென்றால் எல்லோரும் நகைப்பார்களே. பரமேச்வரனை விரும்பும் இளம்பிறையையும் உன்னையும் நினைத்தால் துயரம் ஏற்படுகின்றது. அவருக்கோ மூன்று கண்கள். பிறந்த குலந்தெரியாது. அவர் திகம்பரராக இருப்பதாலேயே ஐச்வர்யம் உள்ளவர் அல்ல என்று நன்கு விளங்குகின்றது. மணத்திற்கேற்ற மாப்பிள்ளைக்கு இருக்க வேண்டிய குணங்கள் எதாவது ஒன்றாகிலும் அவரிடம் உண்டா?''

இதைக் கேட்டவுடன் பார்வதியின் கண்கள் சிவந்தன. அவள் தன் புருவத்தை நெறித்தாள். பிறகு கோபத்துடன் அவள் பின்வருமாறு அவரிடம் உரைத்தாள். "நீர் அவருடைய பெருமையைச் சிறிதும் அறியீர். பெரியார்களுடைய ஒப்பற்றதும் அறிவைக் கடந்ததுமான நிலையைக் கயவர்கள் இகழ்வார்கள். உலகத்திற்கெல்லாம் அடைக்கலமாகவும் ஆசையற்றவராகவும் இருக்கும் பரமனுக்குப் பணம் எதற்கு? அவர் பொருளற்றவராக இருந்தும் எல்லோருக்கும் அவருடைய அருளால் பொருள் உண்டாகும். சுடுகாட்டிலிருந்தாலும் அவர் மூவுலகத்திற்கும் பிரபு. அவருடைய உருவம் பயங்கரமாக இருந்தாலும் அவர் மங்களமயமான பரமசிவம். அவருடைய பெருமையை யார் அறிய முடியும்? அவர் ஆபரணங்களை அணிந்தாலும் அரவங்களைப் பூண்டாலும் அவர் தோலையுடுத்தாலும் பட்டாடையை தரித்தாலும் அவர் கபாலத்தை எடுத்தாலும் சந்திரனை முடிமேல் தாங்கினாலும் பொருத்தமேயாகும். அவருடைய உடலில் சேர்ந்ததால் சுடுகாட்டுச் சாம்பலும் மிகவுந் தூய்மை வாய்ந்ததாகும். அது அவருடைய நடன காலத்தில் கீழே விழும்பொழுது தேவர்கள் யாவரும் அதை விரும்பித் தேடி நெற்றியில் பூசிக்கொள்கிறார்கள். அவர் எருதின்மேல் ஏறிச் சென்றாலும் யானையின் மேலேறிச் செல்லும் இந்திரன் அவருடைய பொன்னடிகளை வணங்குகின்றான். பிரம்மனுக்கே மூலகாரணமான அவருக்குக் குலம் கோத்திரம் இருக்க முடியுமா? (தொடரும்)

*

குமரகுருபரஸ்வாமிகள் அருளிச்செய்த
சகலகலாவல்லி மாலை.

பண்டித திருவாலி அ. இராமாநுஜாசாரியர்.

❁

முத்தும் முத்தமிழும் தந்து வளம் சிறக்கும் தென் பாண்டி நாட்டிலே, தாமிரபர்ணி யாற்றங்கரையிலே ஸ்ரீ வைகுண்டம் என்று வழங்கும் கைலாச புரத்திலே உயர் சைவ வேளாளர் குலத்திலே ஏறக்குறைய முந்நூற்று ஐம்பது வருஷங்களுக்குமுன்பு திருச்செந்தூர் முருகக்கடவுளின் அருளால் அவதரித்தவர் குமரகுருபரஸ்வாமிகள். இவர் பிறந்து ஐந்து வயதாகியும் பேசத்தெரியாது ஊமையாக இருந்தார். பிறகு அறுமுகன் அருளால் திவ்யஞானம் பெற்று "கந்தர் கலிவெண்பா" என்னும் அரிய செய்யுளை ஆசு கவியாக அந்த ஐந்தாம் வயதிலேயே இயற்றியருளினார். அதுமுதல் பரம வைராக்ய நிஷ்டையுடையவராய் உலகினருக்கு உபகாரமாக பல அரிய தமிழ் ப்ரபந்தங்கள் செய்யத் தலைப்பட்டார். அவையனைத்தும் தேனும் அமுதுமாக இருக்கும்.

முத்திதரும் நகருள் ஒன்றாகிய காசிக்குச் சென்று அங்கு ஆண்டுவந்த முகம்மதிய மன்னனைத் தனக்கு வசம்செய்ய வேண்டித் தனக்கு அத்தலத்தில் வழங்கும் இந்துஸ்தானி பாஷையில் பயிற்சியுண்டாக வேண்டுமென்று கலைமகளை வேண்டினார். அப்பொழுது பாடியபாடல்களே "சகலகலாவல்லிமாலை" என்பது. அதில் 10-வது செய்யுளில் "மண்கொண்டவெண்குடைக்கீழாக மேற்பட்ட மன்னரும் என், பண்கண்டளவில் பணியச்செய்வாய்" என்று பாடியவுடன் இந்துஸ்தானியில் நிகரற்ற அறிவு இவருக்கு உதித்தது.

இவ்வறிவைக்கொண்டு முகம்மதிய மன்னனுடன் அளவளாவி கங்கைக்கரையில் ஒரு இடத்தைப்பெற்று அதில் குமரகுருபரமடம் என்று ஒன்றை ஏற்படுத்தித் தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் போற்றி வளர்த்து வந்தார். அடுத்துவரும் சரசுவதி பூஜையன்று நம் தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியரும் இந்த சகலகலா வல்லி மாலையைப் பாராயணம் செய்தால் ஹிந்தி பாஷையை வெகு எளிதில் அறிய அநுகூலமாகும். ஸரஸ்வதி, சகலகலாவல்லி யாதலின் எல்லா மொழிகளையும் கற்பிக்கவல்லவள். ஆதலின் அனைவரும் இம்மாலையைப் பாராயணம் செய்து தந்தமக்கு வேண்டிய பயன்களைப் பெற்று வாழ்வார்களாக.

இந்த நூல் தனித்து எளிதில் கிடைப்பதில்லை. ஆதலின் இங்கே அவை தரப்படுகின்றன.

[கல்வியிற் பெரிய கம்பர் இயற்றிய சரசுவதி யந்தாதியும் பாராயணத்துக்கு மிகவும் சிறந்தது.]

❁

சகலகலா வல்லிமாலை

1. வெண்டாமரைக்கன்றி நின்பதம் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத்தகாது கொலோ! சகமேழுமளித்(து)
உண்டானுறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலா வல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை தேர்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள்வாய்; பங்கயா சனத்தில்
கூடும்பசும்பொற்கொடியே கனதனக்குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலா வல்லியே.

3. அளிக்கும் செந்தமிழ்த் தெள்ளமுதார்ந்துன்னருட் கடலில்
குளிக்கும்படிக்கென்று கூடுங்கொலோ! உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப்பணித் தருள்வாய்; வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக்கடலே சகலகலாவல்லியே.

5. பஞ்சப்பிதந்தரு செய்யபொற் பாதபங்கேருகமென்
நெஞ்சத்தடத்தலராததென்னே! நெடுந்தாட்கமலத்
தஞ்சத்துவசமுயர்த்தோன் செந்நாவுமகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய் சகலகலாவல்லியே.

6. பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல்பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளிதெய்தநல்காய்; எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகலகலா வல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பால்
கூட்டும்படிநின்கடைக்கணல்காய்; உளங்கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த்தீம்பாலமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப்பேடே சகலகலாவல்லியே.

8. சொல்விற்பனமும் அவதானமும் கல்விசொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமைகொள்வாய்; நளினசனஞ்சேர்
செல்விக்கரிதென்றொரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப்பெருஞ் செல்வப்பேறே சகலகலாவவல்லியே.

9. சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னைநினைப்பவர் யார்! நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே.

10. மண்கொண்டவெண்குடைக் கீழாக மேற்பட்டமன்னருமென்
பண்கண்டளவில் பணியச்செய்வாய்; படைப்போன்முதலாம்
விண்கொண்டதெய்வம் பல்கோடியுண்டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்டதெய்வமுளதோ சகலகலா வல்லியே.

துப்பறியும் வீர சிங்கம் **ராஜாராம் நாயுடு**

வை. மு. கோ. 112-வது நாவல்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மதுரம்:—சரி! அவன் சற்று நிம்மதியாகத் தூங்கட்டும்; இப்போதே நமது லக்ஷியத்தைப்பற்றிப் பேசிக்குழப்பிவிட வேண்டாம். நீங்கள் சாப்பிட வாருங்கள். ஜம்புலிங்கம் எப்படி இருக்கிறார்? அவர் மனைவிக்குத் தகவல் தெரியுமா!

டாக்டர்:—தகவல் தெரிந்ததுமட்டுமில்லை; அவர்கள் நேரில் வந்திருக்கிறார்கள். ஏதோ ஒரு முக்யமான கடிதத்தைப் படித்ததும் அவர் ப்ரமாதமாக யோசனை செய்தவாறு, கண்ணை மூடி, தவம் செய்தார். கடிதத்தில் என்ன வெடிகுண்டு இருந்ததோ தெரியவில்லை; நானும் கலங்கியவாறு நின்றேன். உடனே என்னை நோக்கி நீங்கள் உடனே வீட்டிற்குப்போய் ராஜாவை கவனித்துக் கொள்ளுங்கள். நான் அவச்யமானால் கூப்பிடுகிறேன் என்று என்னை வற்புறுத்தி யனுப்பி விட்டதனால் நான் இங்கு வந்து விட்டேன். வைத்திய முறை வரைக்கும்தான் நான் ப்ரவேசிக்கலாமேயன்றி போலீஸ் விஷயத்தில் தலையிட நியாயமில்லை என்றதால் வந்து விட்டேன் என்றார்.

இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ராஜா ஏதோ ஒரு யோசனையைச் செய்து தீர்க்கமாகப் பார்ப்பதுபோல் உதட்டைக் கடித்தவாறு உயர மேட்டு வளையையே பார்த்துக்கொண்டிருந்தான். டாக்டருக்கும், மதுரத்திற்கும் இச் செய்கை ஒரு விசித்திரமாகவே தோன்றியதால் அவனையே அவர்கள் உற்றுக் கவனிக்கலானார்கள்.

அவன் திடீரென்று மேட்டு வளையைப் பார்ப்பதைக் கண்ட ஆனந்தாவுக்குக் கலக்கமும், ஒருவகை அதிர்ச்சியும் உண்டாகிவிட்டது. ராஜா! என்னடா பார்க்கிறாய் கண்ணே! ஏன் இப்படி உதட்டைக் கடிக்கிறாய்? என்று பதறியவாறு ராஜாவின் முகத்தைப் பிடித்துக்கொண்டு கேட்டாள்.

ராஜாராம் மெல்லிய குரலில், டாக்டர்! இப்படி வாருங்கள். முதலில் விளக்கை அணைத்துவிட்டு வந்து இப்படி

மேலே நான் காட்டுகிற இடத்தையே பாருங்கள் என்று காதோடு சொன்னான். எல்லோருக்கும் மிகவும் திகைப்பும், அடங்காத வியப்பும் உண்டாகிவிட்டது.

டாக்டர் உடனே விளக்கையணைத்துவிட்டு ராஜாவின் பக்கத்தில் வந்து முகத்தோடு முகம்பதித்தவாறு, என்னடா ராஜா? என்று கேட்டார்.

டாக்டர்! நன்றாக ஸ்வாசித்துக் கூர்ந்து பாருங்கள். ஏதோ த்ராவகத்தின் வாஸனை வருகிறதல்லவா? இந்த இடத்தில் எத்தகைய மருந்தும் இல்லையே....கூர்ந்து கவனியுங்கள். காற்று உயர ஜன்னல் மூலமாக வரும்போது மட்டும் கலந்து வருகிறது. இதனால் அங்கு என்னவோ யாரோ புகுந்திருப்பதாகவும் அல்லது வேறென்னவாவது அங்கு இருக்க வேணும். என்னை வேறு இடத்தில் தூக்கி விடுங்கள்....உஷாராகப் பார்க்கச் சொல்லுங்கள் என்று கூறியவாறு ராஜா டாக்டரின் உதவியால் வேறு இடத்தில் மாறி படுத்துவிட்டான்.

இத்தனை சிறிய பையனுக்கு பூனையும் நாயும் மோப்பம் பார்ப்பதுபோல எப்படிப் பார்க்கத் தெரிந்தது என்ற வியப்புடன் டாக்டர் மருந்து வாஸனையைக் கூர்ந்து கவனித்தார். அது மிகவும் கொடிய அக்நி த்ராவகம் என்று உணர்ந்துகொண்டு உடனே தன் கையாளை மாடிக்கு அனுப்பச் சொல்லி இரண்டடி நகர்வதற்குள் மேலிருந்து தடதடவென்று ஏதோ ஜன்னல் வழியாகக் கொட்டியதைக் கண்ட டாக்டர் திடுக்கிட்டவாறு தானே மாடிக்கு ஓடினார்.

இதற்குள் டாக்டரின் மனைவி அலறியவாறு ஓடிவந்து விளக்கைப் போட்டாள். ஆனந்தாவுக்கோ தன் வீட்டில் நடந்த கலாட்டாவைப்போல இங்கும் ஏதோ நடந்து விட்டதே. இதென்ன போதாக்காலத்தின் கொடுமை என்று பதறியவாறு மகனிடம் ஓடிவந்து தடவிக் கட்டிக் கொண்டு, இதென்னடா ராஜா! உன் விஷயம் ஒன்றுமே எனக்குப் புரியாதிருக்கிறதே என்று உள்ளம் பதைக்கக் கேட்டாள்.

இதற்குள் மாடிக்கு ஓடிய ஆள் அங்கிருந்து ஒரேகூக் குரலிட்டு 'பிடி,பிடி' என்று பெரியதாகக் கத்தினான். அடுத்த க்ஷணமே தடாரென்று யாரோ குதிக்கும் ஓசை கேட்டது. நாய் பலமாகக் குரைக்கும் சத்தமும் கேட்டது. அடுத்த விநாடி நாய் குரைக்கும் இடத்தில் பலமாக மற்றொரு

வேட்டை நாயும் சேர்ந்து குரைக்க வாரம்பித்ததைக் கேட்டு, எல்லோரும் திடுக்கிட்டு தோட்டத்துப் பக்கம் ஓடினார்கள்.

டாக்டரும் ஒரே பாய்ச்சலில் தோட்டத்துப் பக்கம் தாவி ஓடினர். டார்ச் லேட்டின் உதவியால் தூர இருந்து பார்க்கும்போது வேட்டை நாய் ஒரு கறுத்த ஆளைக் கடித்துக்கொண்டுவிடாமல் இழுப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைந்து ஓட்டமாக ஓடி, டாமீ!வெரிகுட்....வெரிகுட்....என்று நாயைப் புகழ்ந்து தட்டிக் கொடுத்தபடியே தமது ஆட்களைவிட்டு அங்கு தடியன்போல் நிற்கும் ஆளைக் கெட்டியாகப் பிடித்துக் கைகளையும் கால்களையும் கட்டிஉருட்டச் செய்ததோடு அடுத்த நிமிஷமே போலீஸுக்கு டெலிபோன் செய்துவிட்டு ராஜாவிடம் ஓடிவந்து 'ராஜா! ராஜா! நீ சாமான்யச் சிறுவனல்லடா! ஏதோ ஒரு அபூர்வ சக்தி வாய்ந்த தெய்வப் பிறவிதாண்டா! எவனோ தடியன் மாடியிலிருந்து கீழே குதிக்கும்போது காலில் அடிபட்டு விழுந்து கிடக்கும் சமயம் என்னுடைய டாமி வெகு ஜாக்ரதையாகப் பிடித்துக் கொண்டுவிட்டது. அவனை அதோ கட்டி உருட்டிவிட்டு போலீஸுக்கும் டெலிபோன் செய்துவிட்டு வந்திருக்கிறேன். அவன் யாரென்பதை நீ பார்த்தால் தெரியுமா! வா கண்ணு! நான் தூக்கிக்கொண்டு போய் காட்டுகிறேன் என்று ஒரே கொந்தளிக்கும் சந்தோஷம் ஆச்சரியம் இரண்டும் பொங்க ராஜாவை ஒரு சிறிய குழந்தையைத் தூக்கிக்கொண்டு போவதுபோலத் தூக்கிச் சென்று காட்டினர்.

சோணசல ப்ரம்மஹத்திபோல் கட்டிக்கிடக்கும் மனிதனைக்கண்ட ராஜா! பெரிதாகக் கையைத் தட்டிக் கொண்டு சிரித்தபடி, டாக்டர் ஸார்! அகப்பட்டுக்கொண்டார் தும்மட்டி பட்டர்! என்பதுபோல் பேனுக்காரப் பெரிய மனிதர் அகப்பட்டுக்கொண்டுவிட்டார் ஸார்! பாவம், மேலிருந்து ஆத்திரத்தில் குதித்துவிட்டாரு. நன்ருக அடிபட்டு ரத்தம் ஒழுகுது. தயவுசெய்து மருந்துபோட்டுக் கட்டுங்கள். உடல் நிலையை நன்ருகச் செய்துவிட்டால்தானே மறுபடியும் தப்பித்து ஓடவும், குதிக்கவும் சக்தி இருக்கும். டாக்டர் ஸார். திருடத்தெரிந்தவனுக்குப் பதுங்கத் தெரியவில்லை! என்று ஒரு பழமொழி சொல்வார்கள் என்று எங்கம்மா தினம் என்னிடம் சொல்வாள். அதேபோல் பாவம் மருந்தைத் திருடிக்கொண்டு எப்படியோ பதுங்கி உளவு விசாரித்து நான் இங்கிருப்பதை யறிந்துகொண்டு மெத்தையில் வந்து தங்கிவிட்டான்.

டாக்டர்! என்னை ஒழித்துவிடவேண்டும் என்கிற ஆத்திரத்தில் நான் படுத்திருக்கும் கட்டிலுக்கு நேராக உள்ள மாடி ஜன்னலால் மடயன இந்த த்ராவகத்தைக் கொட்டி என்னை எரித்துவிட நினைத்திருக்கிறன். ஜன்னலில் ஏதோ சத்தம் கேட்டது. த்ராவகத்தின் நாத்தம் வந்தது. ஒரு வேளை அங்கு கொட்டி இருக்கிறதோ என்றுகூட சந்தேகமாயிருக்கிறது டாக்டர். ஏனென்றுல் புட்டியில் மட்டும் மூடி வைத்திருந்தால் குபீர் குபீர் என்று காற்றுடன் நாத்தமும் நெடியும் கலந்து வருமா! சொல்லுங்கள்.

என்று வெகு கூர்மையான யோசனையுடன் ராஜா பேசுவதைக் கேட்கக் கேட்க டாக்டரின் இதயம் பூரித்ததோடு ராஜாவைக் கட்டி கட்டி முத்தமிட்டு வியந்து மகிழ்ந்தார். அச்சிறுவனின் வார்த்தையில் மத்தியில் ப்ரேக்கு போடுவதுபோலத் தடைசெய்யக் கூடாது என்கிற எண்ணத்துடன் வெகு உத்ஸாகத்துடன் ஊம் கொட்டிக் கேட்கலானர்.

மேலும் ராஜா துடர்ந்து பேசத்துடங்கி, டாக்டர்! உயர ஆள் இருப்பான் என்று நான் கனவுகூட காணவில்லை. குபீரென்று நாற்றம்வருவதை யறிந்ததும் ஏதோசந்தேகம் உண்டாகியது. உங்கள் டிஸ்பென்ஸரியோ ஆஸ்பத்திரியிலிருக்கிறது. இங்கு அருகில் எத்தகைய மருந்துகளும் இல்லை என்பதையும் சுற்றுமுற்றும் பார்த்ததனுல் நானே உணர்ந்துகொண்டேன். உடனே எனக்கு என்ன தோன்றியது தெரியுமா! என்மீது ஏதோ காரணமில்லாது காரம் வைத்துக்கொண்டு என்வீட்டு மாடியில் தைரியமாகப் பதுங்கிச் சுடவும்துணிந்தவன் வேறு விதத்தில் என்னைத் துன்புறுத்த நினைத்து எவனுவது புகுந்துகொண்டிருப்பானே! என்று தோன்றியதால் தான் மேலே உற்று கவனித்தேன்.

ஜன்னலால் ஒரு கைமட்டும் சிறிதுவெளியில் வருவதை வெகு கூர்மையாகக் கவனித்து விட்டேன். சரி ஏதோ ஆபத்துதான் இங்கேயும் வந்துவிட்டது என்று தோன்றியது. உங்களிடம் உடனே கூறி விளக்கை அணைக்கச் செய்துவிட்டு நான் வேறு படுக்கைக்குத் தந்திரமாய் மாறி விட்டேன். நான் படுத்திருந்த படுக்கையில் அவன் சுடுவானே! என்ன செய்வானே! என்று தோன்றிவிட்டதால் தான் அப்படிச் செய்தேன். துப்பாக்கிதான் அங்கு அகப்பட்டுக்கொண்டுவிட்டதே. அதனுல் இப்படி ஆரம்பித்தான்போலிருக்கிறது. கடவுள் இருக்கிறர் டாக்டர்! என்னைக் காப்பாற்றி விட்டார்! என்று ராஜா பெருமிதத்

துடன் கூறியதைக்கேட்டு டாக்டர் உண்மையில் மெய் மறந்துபோய் ராஜாவைச் சேர்த்தணைத்துக் கொண்டு உள்ளே சென்று ராஜாவுக்கு மதுரத்தைக்கொண்டு த்ருஷ்டி சுத்தச் செய்ததோடு விபூதி குங்குமத்தை அணிந்துப் பின் கட்டிலில் படுக்க வைத்தார். ஆநந்தாவையும் ஜாக்ரதையாக ராஜாவைப் பார்த்துக்கொள்ளச் செய்து விட்டுத்தான் வெளியே சென்றார். அதே நிமிஷம் போலீஸாரும் வந்துவிட்டார்கள்.

கட்டிப்போட்டுள்ள பேனுமனிதனைப் பார்த்தபோலீஸார் தடிப்பயலே! பேனுவை இந்தப் பையன் திருடிக்கிட்டு வந்ததாகச் சொல்லி கடிபுடி செய்த ராஸ்கல் நீயே அந்தப்பையனின் சாமர்த்யத்தால் மறுபடி அகப்பட்டுக்கொண்டாயல்லவா பயலே! இப்படித் திரும்பிப் பார். பேனுவுக்குச் சொந்தக்காரன் நீ என்று சொன்ன பொய்கூட வெட்ட வெளியாகி விட்டதடா! அதிலும் நீ மாட்டிக் கொண்டாய் என்று கூறி 'கும்மா' கொடுத்தான்.

இதைக் கேட்ட டாக்டர், என்ன! என்ன! பேனுவின் சொந்தக்காரன் இவனில்லையா! அட தடிக்கழுதை. அந்த விஷயத்தின் உளவை அறிந்துகொண்ட கள்ளனு இவன் நிரபராதியான பையன்மீது பழி சுமத்தினன். அதான் தப்பி ஓடிவிட எண்ணி எகிறிக்குதித்ததன் பயன் காலையே பகவான் உடைத்துவிட்டான். எலும்பு உடைந்திருக்கிறது. இனி இவன் சாதாரணமாக நடக்க முடியும் என்று தோன்றவில்லை. நொண்டியாகத்தான்....என்று முடிப்பதற்குள் ஐயையோ! கால் ஒடிந்தா போய்விட்டது என்று அந்தக் கைதி வானையளாவும்படிக் கத்தினன்.

அடேயப்பா! உன் கால் ஒடிந்ததற்கு உள்ள அக்கரை அநியாயமாய் நிரபராதியான ஒரு பையனைக் கொலை செய்யத் துணிந்த விஷயத்தில் ஏற்படக் காணேமே....உன் கால் உனக்கு வெல்லம்போலிருக்கிறதே, அவன் உயிர் அவனுக்கு எப்படி இருக்கும்....அவனைப் பெற்றோருக்கு எப்படி இருக்கும் தடிப்பயலே நினைத்துப்பாரடா....என்று கூறியவாறு ஒரு பலத்த குத்துவிட்டான் போலீஸ்காரன்.

இத்தனை சின்ன பையன் இத்தகைய மகத்தான பெரிய காரியங்களை அனயாஸமாகச் செய்ய ஆரம்பித்து விட்டானே! இவன் பெரியவனுகி விட்டால் இன்னும் எத்தகைய அஸகாயசூரனுகி விடுவான் என்கிற வயிற்றெறிச்சலினுலேயே இந்தப் பையன்மீது வீணுன வஞ்சங்

கொண்டு பேனுவைத் திருடியதாக ஒரு குபார் செய்து தண்டிக்கப் பார்த்தான். பிறகு வீட்டிலேயே பதுங்கிச் சென்று சுட்டுக் கொன்றுவிடப் பார்த்தான். அதிலும் தப்பித்துக் கொண்டதால் த்ராவகத்தை ஊற்றித் துன்பத்தை விளைவிக்கப் பார்த்தான். இத்தனைப் பகைமை கொண்டு பழிவாங்குவதற்கு என்ன காரணம் இருக்கும்? இதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும் என்றதீவிரமான யோசனை டாக்டர் மனத்தில் எழுந்தது.

உடனே பேனுக்காரனைப் பார்த்து, ஏண்டா! இந்த சின்னஞ் சிறுபையனை அடியோடு ஒழித்து விடுவதற்காக நீ ஏன் இத்தனை ஆத்திரப் படுகிறாய்? இதற்கு என்ன காரணம்? இதை நீ கட்டாயம் சொல்லியாக வேண்டும். என்று கோபத்துடன் கேட்டார்.

ஆனல் அந்தக்கிராதகன் வாயைத் திறக்கவே இல்லை. குனிந்த தலை நிமிருதுக் கவிழ்ந்திருந்தானே யன்றி நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. இதைக் கண்ட போலீஸ் காரன் அலக்ஷியபாவத்துடன் ஸார்! நீங்கள் இதைப் பற்றிக் கவலையே கொள்ள வேண்டாம். கேட்கிறபடி கேட்டால் விஷயத்தைக் கக்கிவிடமாட்டானு! அதைப் பற்றிக் கவனிக்க நாங்களிருக்கிறோம். சரியான தகவலைத் தெரிந்துகொண்டு வந்து பிறகு சொல்கிறோம் என்று கூறிவிட்டு, ஸார்! ராஜாவை ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவனுடைய க்ஷேமத்திற்கும் நீங்கள்தான் பொறுப்பாளி என்று கூறிவிட்டுத் தகுந்த பந்தோபஸ் துடன் பேனுக்காரனை ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்று விட்டார்கள்.

19

துன்பத்திலும் அன்பு ஜோதி

கடிதத்தை மார்மீது போட்டுக்கொண்டு பலமான யோசனையில் மூழ்கிக் கிடந்த ஜம்புலிங்கம் திடீரென்று எதையோ எண்ணியவராய் ராஜாராமனைக் கவனித்துக் கொள்ளும் பொருட்டு டாக்டரை அனுப்பிவிட்ட பிறகு அவருடைய குழப்பமும், வேதனையும் அதிகரித்து விட்டது. இன்று தப்பித்து ஓடி விட்டவனும் அங்கமுத்து. கடிதம் எழுதியுள்ளவனும் அங்கமுத்து. இதில் ஏதாவது சூது வாதிருக்குமா! பத்து வருஷங்களுக்கு முன்பு என்ன

நடந்தது? புரியவில்லையே? என்பது பற்றிய சிந்தனைகள் அலைஅலையாக ஓடிக்கொண்டிருப்பதால் கண்ணை மூடிய வாறே படுத்திருந்தார்.

இவர் கண்களைத் திறக்காமல் ஒரே மவுனமாக மூடிக் கொண்டிருப்பதைக் கண்ட அவர் மனைவிக்கு மிகவும் பயம் எடுத்துக் கொண்டது. அவர் போலீஸ் உத்யோகத்திற்குத் தகுந்தபடியே புலிபோல் சீறும் சுபாவமுடையவராதலால் அவரிடம் எதிரில் சென்று பேசவும் பயந்தவாறு அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். கடிதத்தில் எத்தகைய பயங்கரமான விஷயம் இருக்கிறதோ! அதுவும் தெரியவில்லையே என்ற நடுக்கத்துடன் அருகில் சென்று அன்பு ததும்ப அவர் மார்பையும் நெத்திக் கட்டையும் தடவிப் பார்த்தாள்.

"தாயிக்குப் பிறகு தாரம்" என்பது பழமொழி. அந்தப் பழமொழியின் சக்திக்கு முன்பு வேறு எதுவும் நிற்க முடியாது என்பது ப்ரத்யக்ஷம். பரிசுத்தமான ப்ரேமை யுடன் கணவனைத் தடவிக்கொடுக்கும்போது அவளை யறியாது இரண்டு கண்களிலும் அருவிபோல் நீர் மடமட வென்றுப் பொங்கிப் பெருகி அவர் மார்புமீது சூடாக விழுந்ததை உணர்ந்ததும் ஜம்புலிங்கம் திடுக்கிட்டவராய்க் கண்விழித்து மனைவியின் அன்பு மயமான முகத்தையும் அவள் இதயத்தில் கொந்தளிக்கும் அலைகளின் உணர்ச்சிகள் அப்படியே முகத்தில் ப்ரதிபலிப்பதையும் கண்டு அவருடைய உள்ளம் உருகிவிட்டது. சேச்சே............ இதென்ன அசட்டுத்தனம்! எதற்காகக் கண்ணீரை விடுகிறாய்? இதைவிட பெரியபெரிய விபரீத விபத்துக்களி லெல்லாம் அகப்படச் செய்துக் காப்பாற்றிய கடவுள் இப்போது மட்டும் கைவிட்டு விடுவாரா! எனக்கு எத்தகைய அபாயமும் இல்லை என்று டாக்டர் சொல்லி விட்டார். தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று. ராஜா வைப் பற்றித்தான் கவலையாக இருக்கிறது. இத்தனை சிறிய விளையாட்டுப்பையன்—அவனுக்குள்ள அபாரமான சாமர்த்யத்தைக் கண்டு ப்ரமிக்கின்றேன். அவன் வீடேறி அவனைக் கொன்றுவிட வந்த எதிரியைப் பற்றித்தான் யோசிக்கிறேன்........சரி........உன்னிடம் ஒரு பெட்டியைக் கொடுத்தானா இக்கடிதம் கொடுத்தவன்?என்றார். ஆமாம்! ஒரு பெட்டியைக் கொடுத்துச் சென்றான். அதை பத்திரமாக வீட்டில் வைத்திருக்கிறேன். ஏன்! அதில் ஏதாவது பாம்...., ஓம்....என்று பயந்தவாறு குளறினாள்.

ஜம்பு :—சேச்சே! அப்படியொன்றும் இருக்காது. இப்போது நான் பந்தோபஸ்தான பாராவுடன் உன்னை அனுப்புகிறேன். நீ சென்று அந்தப் பெட்டியை ஜாக்ரதையாகக் கொண்டு வந்து கொடு. அதில் முக்கியமான ரகஸியம் இருக்கிறது. பிறருக்குத் தெரியக்கூடாது. சீக்கிரம் போய்வா....130 இங்கு வா! என்று கூப்பிட்டார். 130 பயபக்தியுடன் வந்து நின்றான். 'போலீஸ்காரைக் கொண்டுவந்து என் வீட்டிற்கு அம்மாளை பந்தோபஸ்துடன் அழைத்துச் சென்று உடனே திரும்பி அழைத்துக் கொண்டு வா! உம். சீக்கிரம்!' என்று கட்டளையிட்டார். மனைவியையும் அன்பாகத் தேற்றித் தைரியங்கூறி அனுப்பினார். அந்த அம்மாள் சென்றுவிட்டாள்.

அச்சமயம் டாக்டரிடமிருந்துடெலிபோன்மூலம் அங்கு நடந்த சகல விஷயமும் தெரிந்து ஜம்புலிங்கம் சந்தோஷத்துடன் பூரித்துப்போய், ஸார்! ராஜாவைக் கடவுள் நமக்கு ஏதோ ஒரு பாக்யவசத்தினால்தான் கொடுத்திருக்கிறார். அவன் உயிரைக் காப்பாற்றுவது உமது பொறுப்பு. ஜாக்ரதை, ஜாக்ரதை! என்று எச்சரித்தார்.

பழய கேடி அங்கமுத்துவை எப்படித் தேடிப் பிடிப்பது? இன்று ஓடிவிட்ட அங்கமுத்து, முருகப்பன் இவர்களின் தகவல் எப்படியாவது? என்கிற குழப்பத்துடன் தன் மனைவியின் வருகைக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் எதனாலோ! திடீர் திடீர் என்று பயம் வேறு பாதித்து வருத்தியது. அச்சமயம் டாக்டரிடமிருந்து மறுபடியும் டெலிபோன் வந்தது....பேனாக்காரன் குதித்த வேகத்தில் கால் உடைந்துபோய் இருக்கிறது. அதோடு அவன் பேனாவின் சொந்தக்காரன்போல நடந்தவனேயன்றி அவன் சொந்தக்காரனல்லவென்றும் விளங்கிவிட்டது. அவனை சேவகர்கள் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். ராஜாவின் அபாரமானபுத்திசாலித்தனத்தைத் தாம் எண்ணி எண்ணி வியப்புறுவதாயும், ராஜாவைக் கொல்வதற்காகவே அந்தப் பேனாக்காரனும் அவனுடைய சகாக்களும் சேர்ந்து சூழ்ச்சி செய்வதாயும், தனக்கு இன்னும் என்ன தீங்கு செய்துவிடுவார்களோ! என்றுராஜாவே அதிகமாகப் பயப்படுவதாயும், அவன் பெற்றோர்கள் பன்மடங்கு அதிகமாய்த் திகில்படுவதாயும், ராஜாவை ஒருவருக்கும் தெரியாமல் வெளியூருக்குத் தாம் அழைத்துப் போய்விடவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதாயும் இதற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை, யோசனை கூறவேண்டும் என்று டாக்டர் கேட்டார்.

ராஜாவின்மீது கரைகாணாத அன்பு பொங்குவதால் அவனுடையஉயிரைக்காக்கவேண்டிய பொறுப்புதனக்கே ஏற்பட்டு விட்டது என்றதை ஜம்புலிங்கம் உணர்ந்தார். ராஜாவும் அவன் பெற்றோர்களும் பயப்படுவது சகஜந் தான். அதற்குத் தாம் பரிகாரம் தேடவேண்டுவதும் கடமைதான். எனினும் இந்த ராத்ரியில் எங்கும் போக வேண்டாம். நாளைக் காலையில் நான் யோசனை செய்து சொல்கிறேன். ராஜாவை நேரில் பார்க்கிறேன் என்று கூறி சமாதானப்படுத்தியபோது ஜம்புலிங்கத்தின் மனைவி ஜாக்ரதையாகப் பெட்டியுடன் வந்து சேர்ந்தாள். தான் பயந்தபடி எதுவுமாகாமல் முதல் கண்டத்திற்குத் தப்பி வந்துவிட்ட பெருமையுடன் மெல்ல எழுந்து உட்கார்ந்தபடி பெட்டியை வாங்கிக் கொண்டார். எல்லோரையும் அப்புறப் படுத்திக் காவல்கள் பலமாக வைத்துவிட்டுப் பெட்டியைத் திறந்தார்.

கடிதத்தில் கண்டிருக்கிறபடி எல்லா நகைகளும் அப்படியே இருப்பதைக் கண்டு உண்மையில் ஜம்புலிங்கம் வியப்புற்றார். குற்றம் செய்து தண்டனை யடைந்த கைதி தன்னை தண்டித்துச் சிறைக்கு அனுப்பிய மனிதனுக்கு நன்மைகள் செய்வது என்ற ஒரு அதிசயத்தை இக்கலியில் பார்க்க முடியுமா! உபகாரம் செய்கிறவர்களுக்கே அப காரத்தைச் செய்து விடும் இக்கலிகாலத்தில் இம்மாதிரி ஒரு பரமபுருஷனைக் காண்கிறோம் என்றால் இது சாமான்ய மல்ல. அவனைக் கட்டாயம் நாம் கண்டு பிடித்து அந்த மனிதனைக் கொண்டே பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நினைத்தபடி மறுபடியும் ஒரு முறை நகைகளைக் கவனித்துப் பார்த்தார். அதனடியில் ஏதாவது இருக்குமா என்று பெட்டியைப் பூராவும்கிளறிப்பார்த்தார். அங்கமுத்துவின் மீதுள்ள நம்பிக்கையும் விச்வாசமும் இன்னும் அதிகமாக வளர்ந்தது. அவன் எழுதிய கடிதத்தை மறுபடியும் ஒரு முறை படிக்கலானார்.

திரும்பத் திரும்ப எத்தனை தரம் படித்தாலும் அத்தனை தரமும் அக்கடிதத்தில் புதியபுதிய விஷயங்கள் விளங்கு வதாயும் கடிதமே ஒரு ஸ்வாரஸ்யமான கட்டுரை படிப்பது போன்றும் தோன்றியது. உடனே இன்னொரு இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு இந்தக் கொலை சம்மந்த மான பேப்பர்களைக் கொண்டு வரச் செய்து பார்த்தார்.

பாழாய்ப் போன நாடகம் நடந்தாலும் நடந்தது. சிக்கல்முக்கலான விஷயங்கள் ப்ராணனை வாங்குகிறது.

என்று தனக்குள் எண்ணியபடி கேஸின் விவரங்களை மறுபடியும் பூர்ணமாகக் கவனித்தார். நாடகத்தில் பெண் வேடந்தாங்கிய மனிதனுக்கு நாடக முதலாளியின் வைப் பாட்டியின் விலை உயர்ந்த நகைகளைப் போட்டிருந்ததாக வும் அவனுக்கு மயக்கங் கொடுத்துத் தூக்கிக்கொண்டு போவதாகவும் மயக்கங் கொடுத்தவன், கொடுக்கப் பட்டவன் அந்த ஸீனில் வரும் இதரர்கள் எல்லோரும் உளவாக இருந்து மயக்கம் கொடுக்கப்பட்டவனுக்கு உண்மையாகவே அதிகமாக மயக்கத்தைக் கொடுத்து அவனையும் ஏமாற்றிச் சில நகைகளை ரகஸியமாக அமுக்கி விட சதிகாரக் கூட்டத்திற்குள்ளேயும் ஒருவன்—மயக்கம் கொடுக்கிறவன்—சதி செய்து விட்டதாயும் மொத்தமாக ஒரு கூட்டம் உளவாக இருந்து இங்கு கொள்ளையும் அதே சமயம் அங்கு கொலையுமாகச் செய்திருக்கிறார்கள். கொலை செய்த இடத்தில் சம்மந்தப்பட்டிருப்பதாக எண்ணிய பெண் வேஷக்காரன் கொலை செய்யவில்லை என்று உண்மையைக் கூறி மகத்தான ப்ரயாஸையுடன் நகை களையும் கொண்டு கொடுத்து விட்டதனால் இதில் இன்னும் சிக்குமுக்கல் அதிகமாகி விட்டதே யன்றி விஷயத்தில் வெகு ச்ரமப்படும்படியாகி விட்டதே. முதலில் கடிதங் கொடுத்த அங்கமுத்துவை எப்படியாவது கண்டு பிடித்து மீதி தகவலை யறியவேண்டும் என்று முடிவு செய்தவராய் தன் மனைவி பங்கஜத்தைக் கூப்பிட்டு, பங்கஜம்! விஷயம் வெகு முக்யம். விவரமாகச் சொல்வதற்கு நேரமில்லை. இந்தக் கடிதத்தையும் பெட்டியையும் கொடுத்துச் சென்ற மனிதனை உனக்கு நன்றாக அடையாளம் தெரியுமா! என்று கேட்டதும் பங்கஜம் ப்ரமித்துப் போனாள்.

யாரோ மூன்று பேர்கள் வந்திருந்தார்கள்; நான் நிமிர்ந்து சரியாக மூவரையும் பார்க்கவில்லை, பெட்டியைக் கொடுத்தவரை மட்டும் பார்த்தேன். ஏதோ சுமாராக நினைவிருக்கிறது. முகமெல்லாம் அம்மைப் புள்ளிகளின் வடுவு பலமாகத் தெரிந்தது............

பங்கஜம் அவ்வளவு போதும். அந்த மனிதனால்தான் நான் இந்த பயங்கரமான கொலைக் கேஸில் நல்ல வெற்றி பெறவேணும். ஏதோ ஊருக்குப்போவதாக இந்தக் கடிதத் தில் எழுதியிருக்கிறார். உடனே தக்கபந்தோபஸ்துடன் உன்னை ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்புகிறேன். நீ கட்டாயம் போய் அந்த மனிதன் ரயில் ஏறுவதற்காக அங்கு வந்திருப்பான். நீ சற்றும் பயப்படாமல் தைரியமாய் அவரைக் கண்டு நான் உடனே கூப்பிடுவதாகக் கூறி அழைத்து வரவேணும். மறுபேச்சு பேசாதே....தியங்காதே உடனே கிளம்பு! என்று படபடத்துக் கூறினார்.

பங்கஜத்திற்குத் தூக்கிவாரி ப்போட்டதோடல்லாமல் சரீரமே கிடுகிடென்று நடுங்கி விட்டது. அவள் இது வரையில் வீட்டைவிட்டு வெளியே போனது கிடையாது. தன் கணவரிடம் எதிரில் நின்று ஆபீஸ் விஷயங்களைப் பற்றிப் பேசியதுகூட கிடையாதாகையால் அவளையறியாத பயம் பிடறியை அழுத்துகிறது. கணவனோ! முரட்டு சுபாவ முடையவன் என்பது தெரியும். எதிர்த்துப் பதில் சொல்ல வும் துணியவில்லை. அந்த மனிதன் யாரோ! என்ன விஷயமோ! நான் அத்தனை பெரிய ரயில்வே ஸ்டேஷனில் எப்படித் தேடுவது? என்ற குழப்பத்துடன் நின்றாள்.

இவளுடைய தியக்கத்தையும் பயந்து நடுங்கும் குழப்பத் தையும் அறிந்த ஜம்புலிங்கம்........பங்கஜம். உன்னுடைய ஆயுட்காலத்திலேயே இதுதான் முதல்தரமாக நான் சொல்லும் காரியமாதலால் நீ பயப்படுவது சகஜமே! அதை நான் ஆமோதிக்கின்றேன். இக்காலத்திய பெண்மணி களைப்போல் டாப்டீப்பென்று வெளியில் தனித்துச் சென்றறியாததால் இந்தக் காரியம் உனக்கு மிகவும் கஷ்டமாகவே தோன்றும். இந்த நெருக்கடியான சமயத் தில் நான் நொண்டிக்குச் சமமாகி விட்டதாலும் நீதான் அம்மனிதனைப் பார்த்திருப்பதாலும் இப்போது நீ கட் டாயம் போயே தீரவேணும். நம்ம வீட்டு ஆர்டர்லிகூட அவனைப் பார்த்திருக்கலாம். இருப்பினும் அவர்கள் போய் அழைத்தால் அந்த மனிதன் பயந்துவிடக் கூடும். வராமல் போய் விட்டாலும் போய் விடலாம். ஆகையால் தாமதம் செய்யாமல் போய்ப் பாரு! இருந்தால் நம்ம அத்ருஷ்டம்! என்று தட்டிக்கொடுத்துக் தேற்றினார்.

மேலே எதுவும் பேசமனமின்றி ஒப்புக்கொண்டு கிளம்பினாள். தகுந்த போலீஸ் துணையுடன் காரில் அனுப்பி விட்டார். பயமே வடிவமான பங்கஜத்தைத் தூக்கிக் கொண்டு கார் எங்கேயோ பறப்பதுபோன்ற வேதனையும் திகிலும் உண்டாகியதேயன்றி தான் ஏதோ காரில் சாதாரணமாகப் போவது போலவே பங்கஜத்திற்குத் தோன்றவில்லை! கார் சென்று மறைந்தது.

"சந்திரகலா மாலை"

வை. மு. கோ. ஒலிபரப்பிய இசைச் சித்திரம்

ஹரிகதாகலாநிதி ஸ்ரீமதி C. ஸரஸ்வதிபாய்
அவர்களின் முன்னுரையுடன்.

பாசுரங்கள் பல பழைய பிரதிகளைப் பரிசோதித்து வெளியிடப்பட்டுள்ளன.
வை. மு. ஸ்ரீ. எழுதிய பாசுர ஸார அனுபந்தத்துடன்.

விலை அணா 12.

தொழில் மாற்றம்

உலகத்தில் சில தொழில்களின் தலைவிதியால் அவர்களைக் கண்டால் சிலருக்குப் பிடிக்கவே பிடிக்காது. அதிலும் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டாகிய என்னைக் கண்டால் என் சொந்தக்காரர்களுக்கே மதிப்பில்லை என்றால் மற்றவர்களுக்குக் கேட்க வேணுமா! முதலில் எத்தனைக்கெத்தனை குஷியாக இருந்ததோ! அத்தனைக்கத்தனை சப்பிட்டுவிட்டது. என்னுடைய எஜமானனோ, என்ன ஸார்! பிஸினஸ் ஒண்ணுமே சுகமாயில்லை. வெறும் டல்லாயிருக்கிறது. இப்படி நீர் வேலை செய்தால் உமக்கு ஏஜண்டு பதவி நிலைக்காது ஜாக்ரதை. மாதம் பத்தாயிரம் ரூபாயாவது பிஸினஸ் பண்ண வேண்டாமா! என்று சீறிவிழவாரம்பித்தார்.

சரி! கொஞ்ச நாளைக்கெல்லாம் அந்த வேலைக்குத் தலை முழுகிவிட்டு விளம்பர ஏஜண்டு வேலைக்குப் போனேன். அதிலும் பழைய மரியாதைகளே கிடைத்தன. அதையும் விட்டுவிட்டேன். அதன் பிறகு இன்னும் எந்தெந்த வழிகளில் எல்லாமோ பார்த்தேன். கடைசியில் சுலபமான ஒரு வழியைக் கண்டு பிடித்துவிட்டேன். அதென்ன தெரியுமா!

கல்யாணத்தரகன் வேலையில் இறங்கிவிட்டேன். அடாடா! இப்போது என்ன ராஜபோகம் என்கிறீர்கள்! பிள்ளை ஜாதகத்துடன் பெண் வீட்டிற்குப் போனால் டிபன் காப்பி சுலபமாகக் கிடைத்து விடுகிறது. அதேபோல் பிள்ளை வீட்டிலும் என்று சொல்ல வேணுமா? அதிர்ஷ்டவசமாய்க் கல்யாணம் நிச்சயமாகிவிட்டாலோ சம்பாவனைக்குக் குறைவே இல்லை. தவிர இன்னொரு அதிசயம் பாருங்கள். ஜோஸிய சோணாசலத்தைக் கைக்குள் போட்டுக்கொண்டுவிட்டேன். எந்தப் பிள்ளை ஜாதகமோ! பெண் ஜாதகமோ! ஜோஸியர் பார்த்து உடனே வெகு பொருத்தம் என்று கூறி முகூர்த்தமும் வைத்துக் கொடுத்துவிட வேண்டியதுதான் தாமதம். ஜோஸியரின் சன்மானத்தில் எனக்கொரு பங்கு தாராளமாக உண்டு.

முக்கால்வாசி நேரத்தை ஜோஸியரிடமே கழிப்பதால் சாப்பாடு அங்குதான் என்று சொல்லவா வேணும். பொருந்தாத ஜாதகத்தையும் பொருந்திவிடச் செய்து நூற்றுக்கணக்கான கல்யாணங்கள் நடப்பதால் ஜோஸியர் புகழும் வானளாவிவிட்டது. என் புகழும் ஏணிமேல் ஏறிக்கொண்டே போகிறது. பிழைப்புக்கு வழியுண்டாகிவிட்டதால் கவலையின்றிக் காலந்தள்ளுகிறேன்.

யாராவது இதைக் கண்டு பிடித்துவிட்ட பிறகல்லவா என் குடுமிக்கு ஆபத்து! அவ்வளவில் நிர்ப்பயந்தான். அப்படி சிண்டைப் பிடிக்கும் காலம் வரும்போது நானும் க்ராப்புத்தலையனாகிவிட மாட்டேனா?

183195

(ராப்பர் 2-ம் பக்கத் தொடர்ச்சி)

பகவத்விஷய ரஸானுபவம் என் போன்ற வைதிகனுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது. அதைத்தான் முதலில் படிப்பேன்.

ஆ. பாஷ்யகாரர், புதுவை.

ஒருபக்கக் கதை சிலது மிகவும் ரஸமாயிருக்கிறது. சிலது சுமாராக இருக்கிறது. நாங்கள் எழுதியனுப்பினல் போடுவீர்களா!

மயிலை கோபு, அகமதாபாத்.

சிறுகதையோ! பெரியகதையோ சரித்திரக் கதையாக ஏன் வருவதில்லை. முன்பு வை. மு. ஸ்ரீ. எழுதியபடி ஏன் அவர் எழுதுவதில்லை? அதை எதிர்பார்க்கிறேன்.

W. தங்கவேலு, தாம்பரம்.

ஹாஸ்யத்துணுக்குஏன் போடுவதில்லை? உண்மைச் சித்திரமே வருவதில்லை! அதைத்தான் நான ரசிக்கிறேன்.

T. சிம்மன், தண்டயார்ப்பேட்டை.

ராஜாராம் நாயுடுவின் அபூர்வச் செயல்களை நான் உங்களுடைய பல புத்தகங்களில் விடாது படித்து மகிழ்ந்தவள். ஆதலால் ராஜாவின் சரிதை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இந்த சிறந்த கதை இந்த வருஷமே முடிந்து விடுமா! தொடருமா!

மீனாக்ஷி ராமமூர்த்தி, மதுரை.

இதர பத்ரிகைகள்போல் நேயர்கள் கடிதத்தை வெளியிடும் பகுதியை ஏன் மோகினியில் சேர்க்கவில்லை. அதை நான் விரும்புகிறேன்.

வீ. கந்தஸாமி, மணற்பாறை

இப்படி, பலபலவிதமாக எத்தனையோ பேர் எழுதியிருக்கிறார்கள். ஸேது அம்மாள் எழுதியிருப்பதுபோல் மொழிபெயர்ப்பையும் நான் ஆதரிக்கின்றேன். ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஸ்ரீனிவாஸன் எழுதிய கன்னடக் கதையின மொழிபெயர்ப்பை நினைப்பூட்டுகிறேன். இவ்விதழில் ஹிந்திக்கதை மொழிபெயர்ப்பு ஸ்ரீமதி பத்மினி ஸ்ரீனிவாஸன எழுதியிருப்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன். கூடுமான வரையில் மாதாமாதம் எந்த பாஷையிலாவது மொழிபெயர்ப்புப் போடவே ப்ரயத்தனப்படுகிறேன். சிறுகதைகளும் முன்னையவிட அதிகமாகப் போட ஏற்பாடு செய்கிறோம்.

கூடுமானவரையில் நேயர்களின் விருப்பப்படியே மோகினியை வெளியிட்டு அவர்களைக் களிப்பிக்கச் செய்கிறோம். நேயர்களின் கடிதங்களை ப்ரசுரிக்கச் சித்தமாயிருக்கிறோம். விஷயப்ரதானமாயும் ரஸமாயும் இருக்கவேண்டுவது முக்கியம். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அறிவுப்போட்டியைப்பற்றி நேயர்களின் விருப்பமறிய ஆவலுள்ளவளாயிருக்கிறேன்; தெரிவிக்கவும். மோகினி வாசகர்களுக்கு மறுமுறையும் எனது வந்தனத்தைச் செலுத்துவதோடு அவர்களுடைய பேராதரவையும் அன்பையும் என்றென்றும் அளித்து உதவும்படிக் கோருகிறேன்.

ஆசிரியை., 30—9—55

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI-NAYAKIAMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.

வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (ஒளேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ. 2-4
ஞானதீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
தெய்விக ஒளி
ஜீவநாடி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ரூ. 1-12
அருணைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
ரூ. 1-2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள
இந்திரமோஹனா
அணா. 12.
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
அணா. 8
உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி